## உயிரே... உயிரே...

### 1

*"யாராக இருந்தாலும் பிறந்த பின் நிச்சயமாக தீர்மானமாகும் ஒன்று இறப்புதான்! அது என்றைக்கு என்பதுதான் மர்மம். அந்த மர்மத்தைக் கண்டறிய என்னால் முடியும் அது எந்த உயிருக்காக இருந்தாலும்..."*

*-சோதிடர் பீஷ்ம பட்டாச்சார்யா*

அந்த நீண்ட நெடுஞ்சாலையில் அனல் காற்று அலை பாய்ந்து கொண்டிருந்தது.

சாலையின் இரு புறத்திலும் அறுவடையான' வயல் வெளிகள்.

அந்த சாலைமேல் வழுக்கி வரும் அன்னப் பட்சியாட்டம் வந்து கொண்டிருந்தது ஒரு வெண்ணிற சாண்ட்ரோ.

உள்ளே அஷ்வின்.

பால்கோவா நிறத்திலும், பச்சைக் குழந்தை போன்ற முகத்திலும் இளமை ஊஞ்சலாடிக் கொண்டிருக்க தன் சின்ன கண்களால் சாலையின் இரு புறத்தையுமே



பார்த்தபடி காரை விரட்டிக் கொண்டிருந்தான். நல்ல உச்சி வெய்யில். காருக்குள் ஏ. சி. யையும் மீறி வியர்க்கும் போல தோன்றியது. ஏ.சி. டோனரை மேக்ஸிமத்துக்குக் கொண்டுபோய் ஆக்சிலேட்டரிலும் அதிக அழுத்தம் கூட்டினான்.

சென்னை- பாண்டியின் புதிய அந்த புறவழிச் சாலையில் மேடுபள்ளங்கள் இல்லாததால் கார் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்து கொண்டிருந்தது. சட்டென்று சாலையோரமாக இடப்புறத்தில் தட்டுப்பட்டது அந்த பெயர்ப்பலகை.

இடைக்கழிநாடு உங்களை வரவேற்கிறது- என்றது!

பலகையை ஒட்டி ஒரு கப்பிச் சாலை.

"அந்த மண் ரோட்ல ஒரு அரை கிலோமீட்டர் போகணும். போகப்போக தென்னந்தோப்பும் முந்திரித் தோப்புமா இரண்டு பக்கமும் வரும். கேரளாக்குள்ள நுழைஞ்சிட்ட மாதிரி ஒரு ஃபீலிங் கிடைக்கும். அவ்வளவு பசுமை. அதுல ரோட்டு மேல ஒரு டீக்கடை வரும். வெளியிலேயே பலாப்பழங்களை எல்லாம் அடுக்கி வெச்சிருப்பாங்க. அங்க காரைநிறுத்தி ஜோசியர் வீடு எங்க இருக்குன்னு கேளு. சொல்வாங்க..."

-சென்னையில் ராம நடராஜ தீட்சிதர் சொன்னது காதில் எதிரொலித்தது. அடுத்த நொடி காரும் திரும்பியது. அரை கிலோ மீட்டரை முப்பது நொடியில் கடந்து டீக்கடை முன் நின்றது.

உள்ளிருந்து எட்டிப் பார்த்தான் கடைக்காரன்.

"இங்கே ஜோசியர் வீடு எங்க இருக்குன்னு சொல்ல முடியுமா?"

"நீங்க யாரு?" எதிர்க்கேள்வி கேட்டான் அவன். எரிச்சல் வந்தது.

"நான் யாரா இருந்தா என்ன... ஜோசியர் வீடு எங்கேன்னு சொல்ல முடியுமா முடியாதா?"

-அஷ்வின் குரலில் கோபம் சட்டென்று கொப்பளித்தது.

"முடியாது..." அவனிடம் ஒரு வார்த்தையில் பதில். சொன்னதோடு முகத்தை வேறு திருப்பிக் கொண்டான்.

போடா நாயே! என்றது மனது. உடனே... அப்படியே பார்வை நாலாபுறமும் பார்த்தது. அங்கும் இங்குமாக சிலர் தெரிந்தனர். காரை விட்டு இறங்கி அவர்களை நோக்கி நடந்தான்.

புஷ்டியான இளமை மீறிடும் பணக்கார நடை... உரிய பதிலைச் சொல்லவோ அங்கே யாரும் தயாராக இல்லை. சொல்லி வைத்த மாதிரி முறுக்கிக் கொண்டார்கள். மண்டி போட்டு கெஞ்சிக் கேட்டாலும் சொல்ல மாட்டேன் என்கிற மாதிரி நடந்து கொண்டார்கள்.

"அவர் எங்க இருக்கார்னு சொன்னா குறைஞ்சா போயிடுவீங்க... மெட்ராஸ்ல இருந்து எவ்வளவு வேலையை விட்டுட்டு வந்துருக்கேன். தெரியுமா...?"

ஒருவரிடம் அழுத்துக் கொண்டு கூட பார்த்தான். அவருக்கு பரிதாபமாக இருந்ததோ என்னவோ "சாரி தம்பி... யார் வந்து கேட்டாலும் என் வீட்டு அட்ரஸ் கொடுக்காதீங்க. அமைதியா இருக்கத்தான் நான் இந்த ஊருக்கே வந்துருக்கேன்னு அவர் எங்ககிட்ட சொல்லியிருக்கும்போது எப்படிச் சொல்ல முடியும்?"

அந்த பதில் அவனுக்குள் சற்று சமாதானத்தை தந்தது.

"ஐ ஆம் சாரி. அப்ப அவரை பார்க்க முடியாதா?"

"பார்க்கலாம். இங்கேயே இருங்க. நான் போய் கேட்டுட்டு வரேன். அவருக்கு மனசிருந்தா, உங்களுக்கும் அதிர்ஷ்டம் இருந்தா, நீங்க அவரைப் பார்க்கலாம். இல்லேன்னா நீங்கள் வந்த வழியே போயிடுங்க..." என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் பக்கமாக முந்திரிக்காட்டுக்குள் நுழைந்தார். அடுத்த நொடியே மந்திரம் போட்ட மாதிரி மறைந்தும் போனார்.



முந்திரி மரங்களில் நல்ல கொழிப்பு. ஒரே மரத்தில் மஞ்சள் சிவப்பு பச்சை என்று மூன்று நிறத்தில் முந்திரிப் பழங்கள் காய்த்து கண்ணைப் பறித்தன. கீழே மணலில் நிறைய உதிர்ந்து விழுந்திருந்தன. ஒன்றைப் பறித்து சாப்பிடும் ஆசை தோன்றியது. மெல்லக் கிட்டே நெருங்கி ஒரு பழத்தை பறிக்கப் போனான்.

"யாருய்யா அது?" எங்கிருந்தோ ஒரு குரல் வந்து கையைக் கட்டிப் போட்டது. சற்று திடுக்கிடவும் வைத்தது. ஆளைத்தான் பார்க்க முடியவில்லை. இது என்ன மாயம் என்று சில நொடிகள் தடுமாறும் போது அவனுக்குப் பின்புறமிருந்து ஒருவன் முன்பக்கம் வந்தான். தலைப்பாகை கட்டி லுங்கி தரித்து மார்புக்கு துண்டு போர்த்தியிருந்தான்.

"என்னா பழம் வேணுமா...?"

"ஆமா."

"கேட்டுட்டு பறிக்கணும்."

"உங்களைப் பார்த்திருந்தா கேட்டுருப்பேன்."

"அப்படியா... ஆமா எந்த ஊர்?"

"மெட்ராஸ்."

"இங்க எங்க வந்தீங்க?"

"ஜோசியர் இருக்காருல்ல, அவரப் பார்க்க."

"அவரு இப்ப யாரையுமே பாக்கறதில்லையே."

"ஏன் அப்படி?"

"அது சரி... ஒரு நாளைக்கு உங்கள மாதிரி நூறு பேர் வந்து நின்னா யாருக்குன்னு பார்ப்பாரு..."

"வரிசையா பார்க்க வேண்டியதுதானே?"

"என்ன தலையெழுத்து. அழகா இந்த ஊர்ல கிருஷ்ணா ராமான்னு இருந்துட்டு போயிடத்தான் அவருக்கு விருப்பம். ஜோசியம் சொல்லி அலுத்துப் போயிட்டாருன்னு நினைக்கிறேன்."

"ஆமா நீங்க பார்த்திருக்கீங்களா?"

"பார்த்தேனே... அப்படியே புட்டுப் புட்டுல்ல வெச்சாரு. என்னை விடுங்க. இந்த ஊர்ல மங்கலராயன்னு ஒருத்தர். ஆள் பார்க்க தாராசிங் கணக்கா இருப்பாரு. ஆனா அவர் ஒரு வாரத்துல செத்துப் போயிடுவார்னு சொன்னாரு. முதல்ல யாரும் நம்பலை. ஆனா மங்கலராயர் ஒரு வாரத்துல செத்தாரே...!"

"நிஜமாவா?"

"இது என்ன பிரமாதம். ஒரு வாரம் கூட தாங்காதுன்னு டாக்டருங்க சொன்ன பிச்சாயிக் கிழவி இன்னும் பதினேழு வருஷம் உயிரோட இருக்கணும்னு சொன்னாரு. அப்படித்தானே ஆச்சு. கிழவி பொழைச்சு எழுந்து ஓடியாடி வேலையுமில்ல பாக்குது..."

அந்த தோப்புக்காரன் அஸ்வினுக்குள் ஆச்சரிய நெருப்பெறிந்தபோது முன்பு சொல்லிவிட்டு போன நபர் திரும்பி வந்தார்.

"தம்பி வாங்க... உங்களுக்கு அதிர்ஷ்டம். சாமி பாக்கறேன்னு சொல்லிட்டாரு." என்று சொன்னவர் அஸ்வினை அழைத்தும் செல்லத் தொடங்கினார்.

எல்லாமே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது!

## 2

**பு**தன் பலம் மிகுந்த ஜாதகன் நான். அதிலும் அத்தனை சுப கிரகங்களின் பார்வையோடும் சொந்த வீட்டிலேயே குருவும் இருக்கப் பிறந்தவன் நான். கணிதத்தில் நான் சமுத்திரம்.

-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா



**ம**லையாள பாணியான ஓட்டு வீடு. கூரை முழுக்க சுரைக்கொடியின் வியாபிப்பு. வீட்டைச் சுற்றிலும் கூட ரம்மியம் கூத்தடித்தது. குளுகுளுவென்று இருந்தது. அதனுள்ளேதான் இருந்தார் அவன் தேடி வந்த அந்த சோதிடர். அறுபது வயதைக் கடந்த தோற்றம். பஞ்சகச்சம்-மஞ்சள் துண்டு! வீட்டின் மையத்தில் வாஸ்து சாஸ்திரப்படியான திறப்பு. சூரிய ஒளி உள்ளே விழுந்து நான்கு புறமும் வெளிச்சத்தை அள்ளிப் பூசியிருந்தது.

வடமேற்கு மூலையினை ஒட்டிய பாகத்தில் ஊஞ்சல் கட்டப்பட்டு அதில் அமர்ந்திருந்தார் அவர்.

உள்ளே நுழைந்த அஸ்வின் அவரைப் பார்த்துக் கைகூப்பினான். மௌனமாக பார்வையாலேயே அவனை அளந்தார். அவனை ஒரு ஓரமாக உட்காரச் சொன்னார்.

அழைத்து வந்தவர் ஒதுங்கிக் கொண்டார்.

அவரிடம் விசாரிப்பு தொடங்கியது.

"யார் நீ?"

அவன் பதில் பேசாமல் அவரை ஊன்றிப் பார்த்தான்.

"கேக்கறேன்ல...?"

அவன் சற்று சன்னமாக சிரித்தான்.

"என்னப்பா சிரிக்கறே?"

"சிரிக்காம... நீங்கதான் ஜோசியத்துல புலியாச்சே? ஒருத்தர் முகத்தை பார்த்தே அவங்க ஜாதகத்தை புட்டு புட்டு வைக்கறவராமே... நான் யார்னு சொல்லாமலே என்னை உங்களால கண்டுபிடிக்க முடியாதா?"

"ஓஹோ... என்னை நோண்டிப் பாக்க வந்துருக்கியா?"

"அதையும் நீங்களே கண்டு பிடிங்க..." சொல்லிவிட்டு அவரையே பார்த்தான்.

"அவரைப் பார்த்தா எதுவும் சொல்லாதே. அவரே உன்னைக் கண்டு பிடிக்கட்டும். அப்படிக் கண்டுபிடிச்ச பிறகு அப்புறமா உனக்குப் புரியும். அவர் எப்பேர்பட்ட

மேதைன்னு" காதோரம் திரும்பவும் ராமநடராஜ தீட்சிதர் சொன்னது ஒடியது. அவர் முகத்திலேயே சுருக்கம் விழுந்திருந்தது. வீதியிலே போனா ஒருவன் விளையாட வந்து விட்டது போல் தோன்றியது. சட்டென்று கோபம் வந்தாலும் வித்தை அதை அடக்கிவிட்டு அவனை எடை போட்டது. அவன் முகத்தை, தலைமுடியை, மொத்த உயரத்தை என்று சகலத்தையும் பார்த்தவர் "உன்னை நான் யார்னு சொல்லணும்னா நீ மனசுல ஒரு புஷ்பத்தை நினைச்சுக்கணும்" என்றார் சட்டென்று.

போனால் போகிறது என்று கூரைமேல் தெரிந்த சுரைக் கொடியில் பூத்திருந்த பூவை சட்டென்று நினைத்துக் கொண்டான்.

"கொடிப் பூவை நினைச்சியாக்கும்?" பட்டென்று கேட்டார். அவன் முகத்தில் ஆச்சரியம் ஊடுருவியது. அவர் கண்களை மூடிக்கொண்டு சில வினாடி எதையோ யோசித்தார்.

"அம்பி நீ ஒண்ணாம் தேதி பிறந்தவன்" என்றார். அடுத்து அவ்வின் நிஜமாலுமே அரண்டு போனான்.

"அப்பா அம்மாக்கு கடைக்குட்டியும் கூட..." அவன் இப்பொழுது எதுவும் பேசவில்லை. பாக்கெட்டில் கையை விட்டு ஒரு காகித உறையை வெளியில் எடுத்தான். அவரை நெருங்கி அவரது காலடியில் சட்டென்று குனிந்து விழுந்து வணங்கினான். பின் எழுந்து காகித உறையை அவரிடம் நீட்டினான். உறைமேல் அவர் பெயர் எழுதப்பட்டிருந்தது.

கையெழுத்தைப் பார்த்த உடனேயே அவருக்கு தெரிந்து விட்டது.

"தீட்சதர் அனுப்பினாராக்கும்?" என்று கேட்டார்.

"ஆமாம்... இனி எல்லாம் நீங்க சொல்றதுதான் இருக்கு..." என்றான்.



அவர் அர்த்தபுஷ்டியோடு சிரித்தார். அந்த உறையை கிழித்தார். உள்ளே ஒரு கடிதம். பிரித்து வாசிக்கத் தொடங்கினார்.

"அன்புள்ள ஜோசியர் அண்ணாவிற்கு!

அனேக நமஸ்காரங்கள்.

இத்துடன் ஒரு ஜாதகத்தை அனுப்பியுள்ளேன். ஆயிரக்கணக்கான பேருக்கு சோறு போடும் ஒரு பெரிய தொழிலதிபரான சந்திரமௌலீஸ்வரன் என்பவர் ஜாதகம் இது.

மனிதருக்கு இரண்டு முறை ஹார்ட் அட்டாக் வந்து விட்டது. எப்படியோ உயிர் பிழைத்தார். அதன்பின் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார்கள். நான் பார்த்த வரையில் ஆயுள் பலம் துளியும் இல்லை. இன்னும் மூன்று மாசத்தில் மைப்பட்டினம் சேரும் நிலை துல்லியமாக தெரிகிறது. இவரின் மனைவி ஜாதகமும் மிக பலவீனமாக மாங்கல்ய பலமின்றி உள்ளது.

இருந்தும் ஸ்புடம் போட்டதில் துளி பூர்வ ஜென்ம புண்ய பலமும், தர்மபலமும் இருக்கிறது. இவை உயிர்ப் பிச்சை போடுமா என்பது தெரியவில்லை.

எத்தனைதான் விதி வலியதாக இருந்தாலும் அதை மதியால் வெல்ல முடியும் என்று தாங்கள் பலமுறை கூறி நிரூபித்தும் இருக்கிறீர்கள்.

இவர் விஷயத்தில் அது சாத்தியமா என்று பார்த்துக் கூறவும்.

இவர் மரணிக்க நேர்ந்தால் இவரால் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகளும் நொடிந்து போய்விடும். இவருக்கு வாரிசுகளும் இல்லை. எதிரிகள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

இவர் பிழைத்தால் விபரீத ராஜயோகம் ஏற்பட்டு இவர் இந்த இந்தியாவிலேயே பெரிய தொழிலதிபராக வரவும் அரசியலில் பிரவேசித்தால் முதலமைச்சராகவே

வரும் யோகமும் இருப்பதாகவும் ஜாதகம் சொல்கிறது. மற்றதை அண்ணா பார்த்துக் கூறினால் நல்லது. எப்படி யாவது இவர் ஆயுள் நீடிக்க வழிகாட்டவும். அனந்த கோடி நமஸ்காரம்.

பணிவான சிஷ்யன் ராமநடராஜ தீட்சிதர்.

கடிதத்தை படித்தவர் அத்தோடு இருந்த ஜாதகத்தை எடுத்துப் பிரித்தார். அஷ்வின் அவரையே வெறிக்கத் தொடங்கினான்.

பக்கத்தில் இருந்தது பூஜை அறை. எழுந்து உள் சென்றார். பஞ்சாங்கம் அங்கே இருந்தது. போய் எடுத்து வந்தார். கணக்குப் பிள்ளை மேஜை ஒன்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

நேரம் ஓடத் தொடங்கியது.

அஷ்வின் பரபரப்பாகத் தொடங்கினான்.

ஒவ்வொரு வினாடியும் சொல்ல முடியாத பரபரப் போடு உதிரத் தொடங்க ஒண்ணரை மணி நேரம் கூட்டி யும் கழித்தும் கணக்கு போட்டார். நடுவில் திரும்பவும் எழுந்து போய் கட்டுக் கட்டாக புத்தகங்களையும் எடுத்து வந்தார். அவைகளை பிரித்து கண்கள் இடுங்க அவைக ளில் ஒரு பக்கத்தை வாசிக்கையில் மெல்ல முகம் மலர ஆரம்பித்தார்.

அஷ்வினுக்கும் பரபரப்பு அடங்கத் தொடங்கியது.

நிமிர்ந்தார்.

"அம்பி... தீட்சிதர் சொன்னது வாஸ்தவம்தான். ஆயுள் பலமே இல்லை. ஆனா புண்யஸ்தான பலமும் தர்ம பலமும் கை கொடுக்க வாய்ப்பிருக்கு. ரொம்ப ரொம்ப சிரமமான ஒரு காரியம் பண்ணினா இவர் பிழைச்சுடு வார்..." என்றார்.

"என்ன பண்ணனும் சொல்லுங்க... நான் சாரோட பி.ஏ. மட்டுமில்ல. அவரோட பிள்ளை மாதிரி. அவருக்காக உயிரையும் கொடுப்பேன்."



"உயிரையெல்லாம கொடுக்க வேண்டாம். அவருக்கு புஷ்ய நட்சத்திரத்துல புஷ்பவதியான ஒரு பதினெட்டு வயசுப் பெண்ணை கல்யாணம் பண்ணி வைக்கனும். அப்படி பண்ணி வெச்சா இவர் பொழைக்க வாய்ப் பிருக்கு. முடியுமா?"

அவர் கேள்வி அவன் நெற்றியைக் கொத்தியது.

"பதினெட்டு வயசுப் பொண்ணை கல்யாணம் பண்ணி வைக்கனுமா?" அதிர்ச்சியோடு கேட்டான்.

"ஆமாம்... வரப்போற பொண்ணோட மாங்கல்ய பலம் தான் இவருக்கு ஆயுளைத் தர முடியும். வேற வழியே இல்லை..." சொன்னபடியே அந்த ஜாதகத்தை மடக்கி அவன் எதிரில் நீட்டினார்.

"அப்படி கல்யாணம் நடக்க இடம் இருக்கா?"

"இருக்கறதாலதானே சொல்றேன்."

"சாருக்கோ வயசு அறுபத்தி ஏழு. இவருக்கு எப்படி பதினெட்டு வயசுல..."

"அங்கதான் உங்க சாமர்த்தியம் இருக்கு."

"அப்படி இல்லேன்னா...?"

"போய்ச் சேர வேண்டியதுதான்..."

"சரி... எவ்வளவோ ஏழைப் பொண்ணுங்க இருக்காங்க. அவங்கள்ல ஒருத்தர் கிடைக்காமலா போயிடுவாங்க..."

"அதான் இல்லை... புஷ்ய நட்சத்திரத்துல புஷ்பவதி யாயிருக்கனும் அந்தப் பொண்ணு. அந்த சத்யவான் சாவித்ரியோட ஜாதகம் மாதிரி அவ ஜாதகம் இருக் கனும்."

"அதை எப்படி சாமி கண்டுபிடிக்கறது?"

"விட்டா என்னை தேடிக் கொடுக்கச் சொல்வே போலிருக்கே."

"தேடித்தான் கொடுங்களேன். ரொம்ப புண்யமா போகும்."

"அது அவ்வளவு சுலபமில்லை. இங்கே விதிக்கும் மதிக்கும் சம பலம் இருக்கு. ஒரு புள்ளி கூட குறைய வில்லை. முயற்சி செய்து பார். நம்பிக்கையோட செய். இந்த முயற்சிக்கு முதல்ல உன் முதலாளி ஒத்துக்கணும். அவரே முடியாதும்பார். அவர் சரின்னு சொன்னா என் கிட்ட வா. நான் அப்படி ஒரு பொண்ணு ஜாதகம் எங்க கிடைக்கும்னு பிரஷ்னம் பாத்து சொல்றேன். அப்புறமா நடக்க நடக்க நாராயணன் செயல்."

சோதிடர் பீஷ்ம பட்டாச்சார்யா சொன்ன விதத்தில் நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் கூட சம அளவில் இருந்தது.

அஷ்வின் தாடையை தேய்த்துக் கொண்டான்!

## 3

*'திருமணம் என்பது வெறும் உடல் சேர்க்கை மட்டுமில்லை. அது ஒரு உயிர்க் கணக்கு. உயிரும் உயிரும் கலந்து இன்னொரு உயிரை உருவாக்கச் செய்யும் பந்தப் பிணைப்பு. அப்படி உயிரும் உயிரும் இணையும் போது உடல்கள் மட்டும் இணைவதில்லை. இருவரது கிரகக் கூட்டமும் இணைந்து கலப்பதுபோலத்தான் அது.'*

*-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா*

பெஸண்ட் நகர் பீச்சைப் பார்த்தபடி இருந்தது அந்த பங்களா. வாயில்புறத்து கேட்டில் அரண்மனை லட்சணம். அஷ்வின் கார் வந்து தங்கவும் கூர்க்கா வேகமாக கேட் டைத் திறந்து விட்டான்.

பால்கனியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சந்திர மௌலீஸ்வரனின் மனைவி பாரிஜாதம் கார் உள்நுழை வதைப் பார்த்துவிட்டு ஓடிவந்தாள். உள்ளே நுழைந்தவ



னின் கையைப் பிடித்துக் கொண்டு "என்ன அஷ்வின் போனியா... அவரைப் பார்த்தியா? என்ன சொன்னார்...?" ஒரு சேரக் கேள்விகளை அடுக்கினாள்.

"பார்த்தேன்மா... சார்க்கு ஒண்ணும் ஆயிடாதாம். அவர் நூறு வயசு நல்லா இருப்பார்னு சொன்னார்..." அஷ்வின் சொல்வதைக் கேட்டு அவள் முகத்தில் மகிழ்ச்சி வேகமாக பரவியது.

"நிஜமாவா... நீ பொய் சொல்லலையே..."

"இல்லம்மா. உங்ககிட்ட பொய் சொல்வேனா?"

"அப்பாடா, என் வயித்துல பாலை வார்த்தே. இப்பக் கூட டாக்டர் வந்து பார்த்துட்டு போனார். ஜாக்ரதையா பாத்துக்குங்க இல்லேன்னா ஆபத்துன்னார்..."

"அவங்க அப்படித்தான் சொல்வாங்க. அது அவங்க கடமை. ஆனா பட்டாசார்யா நல்லாதான்மா சொன்னார். ஆனா..." அஷ்வின் இழுத்தான்.

"என்னப்பா ஆனால்...?"

"அவருக்கு..."

"அவருக்கு என்ன...?"

"ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணுமாம். அப்ப தான்..."

"இந்த வயசுலயா... என்னப்பா சொல்றே?"

"நான் சொல்லலைம்மா. சாஸ்திரம் அப்படி சொல்லுது..."

"சரி... அப்படி பண்ணி வெச்சுட்டா சரி ஆயிடுமா?"

"நிச்சயமா சரி ஆயிடுமாம். வரப்போற பொண்ணோட மாங்கல்ய பலத்தால் எல்லாம் சரியாயிடுமாம்."

"இதோ பார். எனக்கு அவர் நல்லா இருக்கணும். அதான் முக்கியம். எத்தனை கல்யாணம் நடந்தாலும் கவலை இல்லை."

"நீங்க இப்படி சொல்வீங்கன்னு தெரியும். ஆனா சார்..."

"அவர் கிடக்கறார்... அவரை நான் சம்மதிக்க வைக்கறேன். ஆமா பொண்ணு கிடைக்கும்தானே?"

"அதுலயும் ஒரு சிக்கல் இருக்கும்மா..."

"என்னப்பா கொஞ்சம் கொஞ்சமா சொல்றே. முழுசா சொல்லு."

"புஷ்ய நட்சத்திரத்துல புஷ்பவதி ஆன பொண்ணு கழுத்துலதான் சார் தாலி கட்டணுமாம்."

"இதென்னப்பா இது... அதை எப்படி கண்டுபிடிக்கிறது."

"அதை நானே பார்த்து கொடுக்கறேன்னார். சார் சம்மதம்தான் இப்ப முக்கியம்."

"அது... அது... நீ கவலைப்படாதே. நான் அவர்கிட்ட பேசறேன். சம்மதிக்கவும் வைக்கறேன்." பாரிஜாதம் சொன்னபடியே மாடிப்படி ஏறினாள்.

மாடியில் இருந்தது அந்த ஏ. சி. அறை. கண்ணாடிச் சுவரோடு அதன் வழியாக கடற்கரையைப் பார்க்க முடிந்த விதத்தில்...

கண்ணாடி அருகே நின்றபடி சாலையையே பார்த்துக் கொண்டிருந்தார் சந்திரமௌளீஸ்வரன்.

பாரிஜாதம் உள்ளே வரவும் திரும்பினார்.

"என்னங்க ஒரு முக்கிய விஷயம்...?" என்றபடி அவள் அவரை நெருங்கினாள்.

"என்ன பாரிஜாதம்..."

"நம்ம தீட்சிதர் இல்ல தீட்சிதர்..."

"யாரு ஜோசியர்தானே... அவருக்கென்ன...?"

"அவருக்கு ஒண்ணுமில்லை. அவர் மூலமா..."

"என் ஜாதகத்தைப் பார்த்தியாக்கும்?"



மனைவி பற்றி நன்கு தெரிந்தது போல அவர் கேட்ட கேள்வி பாரிஜாதத்தை சற்று கட்டிப்போட்டது.

"உம்... சொல்லு... ஜோசியர் என்ன சொன்னார்?"

"..."

"என்ன பாரிஜாதம், இப்படி பார்த்தா எப்படி? ஜோசியர் என்னம்மா சொன்னாரு."

"இல்ல நீங்க கேக்கற விதமே சரியில்லை."

"சரி... எப்படி கேக்கணும்கறே?"

"முதல்ல எனக்கு ஒரு பதில் தெரியணும். நமக்கு கல்யாணம் ஆன இந்த ஐம்பது வருஷத்துல ஜாதகம் ஜோசியம்னு எதையும் நீங்க பார்த்ததில்லை. பார்க்கவும் அவசியமில்லாமலே போயிடுச்சு. எப்பப்பார் பிசினஸ்-மீட்டிங்- வெளிநாட்டு டூர்னே நீங்க இருக்க, உங்க கூட சேர்ந்து சுத்தத்தான் எனக்கு நேரம் சரியா இருந்திச்சு. இப்ப கேக்கறேன், நான் ஜோசியர்கிட்டதான் போயிருப்பேன்னு எதை வச்சு சொன்னீங்க?"

மனைவியின் கேள்வியை ரசித்தார் சந்திரமௌளீஸ்வரன். சிரித்தபடியே கடலைப் பார்த்தவர், "பக்தியும், ஜோதிடமும் எப்பவுமே மனசு பலமிழக்கும் போதுதான் பாரிஜாதம் மனுஷனுக்கு தேவைப்படுது.

எனக்கு மூணு மாசம்னு டாக்டர் கெடு விதிச்சிட்ட நிலைல ஒரு இந்து பொண்ணான நீ என்ன செய்வே, எங்க போவேன்னு சொல்றதா கஷ்டம்...?"

அவர் பதிலில் அவர் எப்படி ஒரு விஷயத்தை அலசுகின்றவர் என்பது துல்லியமாகத் தெரிந்தது.

"சரி, ஜோசியத்தை பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"நான் அதைப் பத்தி எதையுமே நினைக்கத் தயாராக இல்லை. அது உண்மையோ பொய்யோ அதைப் பத்தியும் எனக்குக் கவலையில்லை. எனக்கு அதைவிட அதிகமாகவே வேற விஷயங்கள் பத்தி யோசிக்க வேண்டியிருக்கு பாரிஜாதம்.

சின்னதும் பெரிசுமா பதினாலு நிறுவனங்கள். நேரடியாவும் மறைமுகமாகவும் அதனால வாழற குடும்பங்கள் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர்.

நான் ஒருவேளை போய்ட்டா இவங்களை என்னப் போலவே கவனிச்சிக்க எனக்கு பொறுப்பா ஒருத்தர் வேணும். நான் எப்ப தளருவேன்- என்னை எப்ப சாய்க்கலாம்னு நினைக்கற எதிரிகளுக்கு இடம் கொடுத்துடக் கூடாது. இதெல்லாம்தான் இப்ப என் கவலை..."

சந்திரமௌலீஸ்வரனின் மிதமான குரலில் வருத்தமும் ஆசையும் இழையோட பேசிய பேச்சு பாரிஜாதம் கண்ணில் ஈரத்தை உருவாக்கியிருந்தது.

"எதுக்கு அழறே... நீயே சொல்லு இப்ப இதெல்லாம் தானே பெரிசு?"

"உண்மைதான்... இதெல்லாம் உங்களுக்கு ஏதாவது ஆயிடும்னு பயந்துதானே?"

"நான் எங்க பயந்தேன். இப்பகூட பயப்படலை. ஆனா ரிப்பேர் ஆயிட்ட ஒரு வண்டி எவ்வளவு தூரம் ஓடும்னு யோசிக்கத்தான் வேணும். நான் ரிப்பேர் ஆயிட்டேன். எனக்கே நல்லாத் தெரியுது. மருந்தும் மாத்திரையும் வலி இல்லாம வேணா சாக வைக்கும். ஆனா மரணம் தவிர்க்கவே முடியாத ஒண்ணு பாரிஜாதம்."

"அப்படி சொல்லாதீங்க. நீங்க புராணமெல்லாம் படிச்சதில்லையா? எரிஞ்சு சாம்பலான பிறகு அந்த சாம்பல்ல இருந்து எழுந்து வந்தவங்க உண்டு."

"அதெல்லாம் ஒரு ரசனைக்காகவும் தன்னம்பிக்கையோடு இருக்கிறதுக்காகவும் சொல்லப்பட்டது பாரிஜாதம். புரியாம பேசாதே. நீ சட்டுன்னு விஷயத்துக்கு வா."

அவர் நறுக்கி நிறுத்தினார். அவள் கலக்கமுடன் அவரைப் பார்த்தாள். பின் பீடிகை போடத் தொடங்கினாள்.

"நான் சொல்றதைக் கேட்டு நீங்க என்னைக் கோபிக்கக் கூடாது."



"அது நீ சொல்லப் போறதைப் பொறுத்தது."

"உங்களுக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ. எனக்கு சில விஷயங்கள்ள நம்பிக்கை இருக்கு."

"தப்புல்ல. விஷயத்துக்கு வா."

"நீங்க நூறு வருஷம் வாழ வழி இருக்கு."

"என்ன அது?"

"உங்களுக்கு ஆயுளை மாங்கல்ய பலத்தால தர முடியும்."

"சரி... தந்தா சந்தோஷம்."

"ஆனா எனக்கு மாங்கல்ய பலமில்ல..."

"உம்... சட்டுன்னு சொல்லு..."

"அதனால..."

"அதனால?"

"உங்களுக்கு இன்னொரு கல்யாணம்."

பாரிஜாதம் முழுவதும் முடிக்காமல் வெளிறத் தொடங்கிய கண்களோடு அவரைப் பார்த்தாள்.

"எனக்கு இன்னொரு கல்யாணம் நடந்தா எனக்கு உசிர் போகாதாமா?" அவரும் மென்மையாக கோபிக்காதபடிதான் கேட்டார். அவள் தலை வேகமாக அசைந்தது.

"இதை நீ நம்பறியா?"

"நம்பறீங்களான்னா... செஞ்சு பார்த்துடுவோமே."

"பாரிஜாதம் எனக்கு பிரச்சினை இதயத்துல... அதுக்கு வயசாயிடுச்சு. ரத்தத்துலயும் ஈரலுக்கும் சர்க்கரை கொழுப்பு உப்புன்னு எலலா கன்றாவியும் இருக்கு. இதுக்கு புதுசா ஒரு மருந்து கண்டுபிடிச்சிருக்காங்க. சாப்பிட்டா குணமாகும்னு நீ சொன்னா அது புத்திசாலித்தனம். அதுல அர்த்தம் இருக்கு. ஒரு பொண்ணை

கல்யாணம் பண்ணிகிட்டா எனக்கு ஆயுசுன்னா என்ன அர்த்தம்?

எனக்கு மனகல பிரச்சினைன்னா இந்த மாதிரி கல்யாண உறவால ஒரு புத்துணர்ச்சி ஏற்பட வாய்ப்பிருக்குன்னு யூகிக்கலாம். இது எதோடையும் சேராத ஒண்ணா இருக்கு. எந்த முட்டாள் ஜோசியன் இப்படி எல்லாம் பலன் சொல்றான்.?"

சந்திரமௌளீஸ்வரனின் கேள்விகளோடு பி.பி.யும் மெல்ல உச்சகட்டத்தை நோக்கி ஏறத் தொடங்கிற்று.

"பீஷ்ம பட்டாச்சார்யான்னு ஒருத்தர். இவர் சொன்னா சொன்னதுதானாம். அவ்வளவு துல்லியமா சொல்வாராம்."

"இப்படி எல்லாம் விநோதமா பேர் வெச்சிகிட்டு அந்த ஆள் உளறிக் கொட்றானாக்கும்? நீயும் உன் ஜோசியமும்... அந்த ஆள் சொன்னா உனக்கு எங்க போச்சு புத்தி, எனக்கு என்ன வயசுன்னு தெரியும்தானே?"

"எல்லாம் தெரியுங்க. எத்தனை வயசானா என்ன. ஆம்பளை ஆம்பளைதானே?"

"அது சரி... விவஸ்தைன்னு ஒண்ணு இருக்கு பாரிஜாதம். இனிமே இப்படி பீஷ்மர் சொன்னார் வியாசர் சொன்னார்னு என்கிட்ட வராதே. இதை எல்லாம் கேட்டுகிட்டு உயிரோட இருக்கறத விட நான் செத்துடறதே மேல்..."

"இல்லீங்க. அது வந்து."

"கெட் லாஸ்ட்!"

"நான் சொல்றத..."

"பாரிஜாதம் நீயா போயிடு. இல்ல நான் இங்க இருந்து வெளிய போயிடுவேன்."

அவள் உடனேயே சோர்ந்து போனாள்.

காற்று போன பலூன் போலானாள்.



வெளியேறத் தொடங்கினாள்.

காத்திருந்தான் அஷ்வின்.

"அம்மா... சார் என்ன சொன்னார்."

"கழுத்தப் பிடிச்சு வெளிய தள்ளாத குறை..."

"நான் இதை எதிர்பார்த்தேன்."

"எனக்குக் கூட இப்ப கொஞ்சம் சந்தேகமாதான் இருக்கு அஷ்வின்."

"எதுலம்மா."

"வியாதிக்கு மருந்து சாப்பிட்டா குணமாகும் கல்யாணம் எப்படி குணப்படுத்தும்?"

"இதுக்கு பதிலை அவர்தான் சொல்லணும்."

"எது எப்படியோ... உன் சார் இப்ப கோபத்துல இருக்கார். ஜோசியம்னாலே சீறி விழறார். ஆமா நீ என்ன நினைக்கறே."

"ஜோசியத்த பத்தி எனக்கு நிறைய அவ நம்பிக்கை இருந்துச்சம்மா. ஆனா இப்ப இல்லை."

"எப்படி?"

"நான் பிறந்த நேரத்தை வெச்சு தீட்சதர் எனக்கு பலன் சொன்னாரு. அதன்படிதான் எல்லாம் நடக்குது. அப்ப நம்பித்தானே தீரணும்?"

"ஆச்சரியமா இல்ல."

"ஆச்சரியம்தான். அதுதானே ஜோசியம்."

"அப்ப சார் விஷயத்துலயும் கல்யாணம் நடந்தா அவர் பொழைச்சிடுவார்னு நீ நம்பறியா?"

"நிச்சயமா..."

"எப்படி அவ்வளவு தீர்மானமா சொல்றே?"

"என் அனுபவம் அப்படி. இதே பட்டாச்சார்யாவை நான் ஒண்ணும் சாதாரணமா அணுகலையே. உங்க ஜோசியத்தால என்னை கண்டுபிடிங்கன்னுல்ல சொன்னேன்."

"கண்டு புடிச்சாரா?"

"கலக்கிட்டாரும்மா."

"அப்ப நீ சார் கிட்ட பேசிப் பாரேன்."

"உங்க பேச்சையே கேட்காதவர் என் பேச்சையா கேட்பார்."

"அப்ப இதுக்கு என்னதான் வழி?"

"ஒரு நிமிஷம்..." அஷ்வின் தன் செல்ஃபோனில் தீட்சதரைப் பிடித்தான்.

"சாமி நான் அஷ்வின் பேசறேன். இங்க பாஸ் கல்யாணம்கற வார்த்தையை எடுத்தாலே வெளியப் போன்னு சொல்றாரு."

"இப்ப எடுத்தா அப்படிதான் சொல்வார். வெள்ளிக் கிழமை பௌர்ணமி வருது. அப்ப நிலா பார்க்க உக்காந்துகிட்டு பக்குவமா எடுத்துச் சொல்லுங்க. அவர் முரண்டு பிடிக்க மாட்டார். குறிப்பா சந்திர பிம்பம் அவர் மேல படணும். அதனால உருவாகற மனநிலை ரொம்ப முக்கியம்.

"சரி... அப்படியே சம்மதிச்சுட்டாலும் இரண்டு மாசத்துல அவருக்கு கல்யாணம் பண்ண வேண்டியிருக்கு. அதுக்குன்ற பொண்ணு கிடைக்கமா சாமி..."

"இவ்வளவு தூரம் விவரங்கள் தெரிய வந்திருக்குன்னா அதுக்கு காரணமே அப்படி நடக்கணும்னு விதி ஆசைப் படறதனாலதான்... ஆகையால நம்பிக்கையோட நீங்க தொடங்குங்க..."

அவன் திரும்பினான்.

"அம்மா அவர் வர்ற வெள்ளிக் கிழமை சம்மதம் சொல்வாராம்! தீட்சதர் சாமி சொல்றாரு."

"நிஜமாவா?"

"பாத்து தெரிஞ்சுக்குங்கம்மா... அப்ப தெரியும் ஜோசியத்தோட பெருமை..."



அஷ்வின் ஜோசியத்துக்கு கொள்கை பரப்புச் செயலாளர் போல பேசினான். பாரிஜாதம் அந்த நொடியே வெள்ளிக்கிழமை பௌர்ணமியை எதிர்நோக்கத் தொடங்கிவிட்டாள்!

## 4

*'திருமணத்தை பொருத்தமட்டில் நான் ஒரு பெரிய ஆராய்ச்சியே செய்து முடித்தவன். எண்ணையோடு கூட நீர் கலந்து விடலாம். சில பொருத்தங்கள் இல்லாமல் சிலர் ஒன்று சேரவே முடியாது. ஆணுக்கும் பெண்ணுக்குமான சேர்க்கைக் குப் பின்னால் ஒரு பெரிய காரண காரியம் இருக் கிறது. அது இல்லாமல் சேர்க்கை இல்லவே இல்லை. இதன்படி பார்த்தால் திருமணம் என்பது நாம் நிச்சயித்த ஒன்று இல்லை. அது ஏற்கனவே தீர்மானமான ஒன்று என்பதுதான் சத்தியம்.'*

*-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா*

குத்து விளக்குபோல தெரிந்து கொண்டிருந்தாள் திவ்யா.

பதினெட்டு வயசு என்று சொன்னால் நம்ப முடியாது. இயற்கை பெண்களிடம் மட்டும் பல சமயங்களில் மிதமிஞ்சி விடுகிறது.

திவ்யாவிடமும்...

கிளறிக் கொட்டிய பால்கோவா போல இடுப்பு, செந்நிற தண்ணீர்ப் பந்தாட்டம் மார்பு... பனியில் மலர்ந்த அல்லியாட்டம் முகம்- பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

அதனால்தானோ என்னவோ பாஸ்கரும் அவளைப் பார்ப்பதை ஒரு தொழிலாகவே கொண்டிருந்தான்.

டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் எதற்கு இருக்கிறது? காதலர்கள் சந்தித்துக் கொள்ளவும்- காதலுக்கு உரம் போடவும்தானே...?

அந்த டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் அவ்வளவாய் கூட்டமும் இல்லை. உலகமே கம்ப்யூட்டருக்கும் கீ போர்டுக்கும் தாவிவிட்ட நிலையில் இன்னமும் ஒருவன் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டை நடத்த, அங்கே லோயருக்காகவும் ஹையருக்காகவும் இன்னும் சிலரும் படிக்கவர... திவ்யாவும் பாஸ்கரும் கூட அவர்களில் இருக்க அன்று பாஸ்கர் திவ்யாவிடம் ஐ லவ் யூ சொல்லி விடுவது என்கிற தீர்மானமான முடிவோடுதான் வந்திருந் தான்.

மென்று விழுங்குவது, ஜொள்ளு விடுவது, தட்டுத் தடுமாறுவது எல்லாம் போன ஜெனரேஷனோடு போயே போய்விட்டது.

"ஏய்... என்ன சொல்றே? நான் உன்னை விரும்ப றேன். ஸ்ட்ரெய்ட்டா சொல்லு. என்னைப் பிடிச்சிருக்கா... பிடிக்கலைன்னா பாதகமில்லை. நான் தாடியெல்லாம் வளர்த்துக்க மாட்டேன். தேவதாஸ் மாதிரியும் தண்ணி போட்டு துக்கம் கொண்டாட மாட்டேன்."

பாஸ்கர் பட்டென்று போட்டு உடைத்து அவளிடம் கேள்வி எழுப்பியபோது அவள் கூட பெரிதாக திக்கு முக்காடவில்லை.

சினிமாவில் ஹீரோயின் பார்க்கிற மாதிரி பார்க்கவோ, படபடப்படையவோ இல்லை. மாறாக சிரித்தாள்.

"தேங்க் காட்... " என்றாள்.

"எதுக்கு?" அவன் கேட்டான்.

"த சேம்... அதாவது இப்போ நீங்க சொன்ன அதே டயலாக்கை நான் உங்களைப் பார்த்து சொல்றதா இருந்தேன் பாஸ்கர். நீங்க முந்திக்கிட்டீங்க."

"ஸோ... யூ லவ் மி?"

10 MAY 2004



"அது நீயும் விரும்பினால்தான்..."

"சரி நான் விரும்பலை. ஏற்கனவே நான் எங்கேஜ் ஆகியிருந்தா..."

"ஆல் த பெஸ்ட் சொல்லிட்டு போயிட்டே இருப்பேன்"

"ரியலா..."

"சரி, என்ன பண்ணுவேன்னு நினைச்சே?"

"இல்ல, ஃபீல் பண்ணுவியான்னு பார்த்தேன்."

"எதுக்கு பண்ணனும். பாஸ்கர் மட்டும்தான் இந்த உலகமா. அஸ்வின், குமார், ரஞ்சித், ராம்னு எவ்னோ பேர் இருக்காங்க."

"எனிவே எல்லாம் ஆம்பளைப் பேரா சொன்னியே அதுக்கு உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்."

"ஒரு பொண்ணு லவ் பண்ணணும்னா ஆம்பளையத் தானே லவ் பண்ண முடியுமா? வாட் நான்சென்ஸ் யூஆர் டாக்கிங் பாஸ்கர்."

"என்ன திவ்... நீ ஃபயர் கல்ச்சர் பத்தி கேள்விப்பட்ட தில்லை?"

"ஃபயர்... ஃபயர்... ஓ! நீ அதைச் சொல்றியா? ச்சீ..."

"ச்சீயாவது... தூவாவது... தமிழ்நாட்டுல மட்டும் குறிப்பா இந்த சென்னையில் மட்டும் பத்தாயிரம் லெஸ்பியன் இருக்காங்களாம். தெரியுமா?"

பாஸ்கர் புள்ளி விவரம் தர திவ்யாவும் வாயைப் பிளக்க இவ்வளவும் இன்ஸ்ட்யூட் ரிசப்ஷனில் யாரும் இல்லாத நிலையில் நடந்து முடிந்தது. பிரின்சிபால் மெல்ல கிளாஸ் ரூமிலிருந்து எட்டிப் பார்த்தார்.

"ஹலோ சார்" என்றார்கள் இருவரும்.

"என்ன கிளாஸ் அட்டெண்ட் பண்ணலியா?"

"பண்ணணும் சார்..."

"சரி... உங்க பிராப்ளத்தை அட்டெண்ட் பண்ணி சால்வ் பண்ணிட்டீங்களா?"

"எங்க பிராப்ளத்தையா... என்ன சார் சொல்றீங்க?"

"அதான் ஐ லவ் யூல ஆரம்பிச்சு ஃபயர் கல்ச்சர் வரை வந்தீங்களே... அதைச் சொன்னேன்."

"சார்..." லேசாக அதிர்ந்தான் பாஸ்கர்.

"ஏன் வாயைப் பொளக்கறே... நான் ஒண்ணும் ஒட்டுக் கேட்கலே. உங்க பேச்சுதான் உள்ற இருந்த என் காது வரை விழுந்தது..."

இருவரும் அவர் அப்படிச் சொன்னதன் எதிரொலியை சற்று அசட்டுத்தனமாய்க் காட்டினார்கள்.

"ஓ.கே... பாஸ்கர் நான் உன்னை சில கேள்வி கேட்கவா?"

"என்ன சார்?"

"உன் குவாலிபிகேசன் என்ன?"

"பி. ஏ. சார்."

"ஏன் மேற்கொண்டு படிக்கல..."

"சாரி சார்... மேற்கொண்டு படிக்கப் பிடிக்கலை சார்."

"சரி... அப்ப இந்த தகுதியோடதான் வேலை தேடப் போறியா?"

"தேடல்லாம் போறதில்லை சார். நானா சுயமா ஏதாவது தொழில் பண்ணலாம்னு பாக்கறேன்."

"அற்புதமான முடிவு. சரி. அதுக்கு எதுக்கு டைப் ரைட்டிங் கத்துக்கணும்."

"ஏன் சார்... ஒரு மெஷின் வாங்கி அப்ளிகேஷன் அடிச்சு கொடுத்து கூட காசு பாக்கலாமே...?"

"லோ... இந்த மெஷினை வெச்சுதான் பிழைப்பே..."

"ஆமாம்..."

"திவ்யா உன்கிட்ட சில கேள்விகள்."



"என்ன சார்?"

"நீ எதுவரை படிச்சிருக்கே?"

"நானும் பி.ஏ. தான் சார்."

"டைப்ரைட்டிங் கத்துக்க காரணம்?"

"எங்கேயாவது ஸ்டெனோவா போகத்தான்."

"ஏன் கம்ப்யூட்டர் கத்துக்க விரும்பல?"

"அதுக்கு நிறைய செலவாகும். அதுக்கான வசதி அப்பாக்கு இல்லை."

"'சரி, அப்பா என்ன பண்றார்?"

"அப்பா... அப்பா... இல்லை சார்."

"இல்லைன்னா... பாஸ் அவே..."

"நோ சார்... என்னை அம்மாவை விட்டுட்டு ஓடிட்டார்."

"மை குட்நெஸ்... சரி உன் அம்மா உன் காதலுக்கு சம்மதிப்பாங்களா..."

"நிச்சயமா சார்..."

"பாஸ்கர், வாட் அபவுட் யுவர்ஃபேமிலி."

"கொஞ்சம் போராடணும் சார்."

"ஜெயிச்சிடுவியா?"

"நிச்சயமா... பழைய காலம் மாதிரியா இப்ப? பொண்ணு நல்லா இருக்காளா... பிடிச்சிருக்கா. ஓ.கே. அவ்வளவுதான்."

"கல்யாணம் பண்ணிக்கறதுங்கறது உங்களுக்கு இப்ப இவ்வளவுதானா?"

"வேற என்ன சார் இருக்கு இதுல...?"

"அப்ப போராடணும்னு எத வெச்சு சொன்னே?"

"சாதி அந்தஸ்து இதை வெச்சு சொல்லலை. திவ்யா வுக்கு அப்பா இல்லை இல்லியா... அந்த விஷயம்தான். ஃபேமிலில ஒரு பெரிய கேள்வியை உருவாக்கும்."

"அதுவே ஒரு சிம்பதியை கூட உருவாக்கலாம் இல்லியா?"

"உருவாக்கலாம். இன்னிக்குத்தானே இரண்டு பேருமே காதலை கன்ஃபார்ம் பண்ணிகிட்டிருக்கோம். ஆகையால இனிதான் இது விஷயமா பேசிப் பார்க்கணும்."

"ஓ.கே. ஆல் த பெஸ்ட்! உங்க காதலை நீங்க கண்யமா கையாளணும். சினிமா பார்க் பீச்சுன்னு போய்..."

"போவோம் சார். ஆனா தப்பா பிஹேவ் பண்ண மாட்டோம்."

"நோ... நான் இதை மட்டும் நம்பமாட்டேன். கல்வி, பழக்க வழக்கம், இதனால இந்த ஜெனரேஷன் ரொம்ப மெச்சூர்டா பிஹேவ் பண்ணுதுங்கறது சரி. ஆனா தப்பா பிஹேவ் பண்ண மாட்டோம்னு சொல்றது காஷ்மீருக்கு போய் குளிர் எடுத்தா போத்திக்க மாட்டோம்னு சொல்ற மாதிரி..."

பிரின்சிபால் மைசூர்பாகை நறுக்கின மாதிரி நறுக்கி னார். அவர்கள் பதில் சொல்லாமல் அவரை பார்த்தார்கள்.

ஏதோ இந்த மட்டில் ஒரு பிரின்சிபால் காட்டுக் கத்தாய் கத்தாமல் "இங்க படிக்க வந்தீங்களா இல்லை காதலிக்க வந்தீங்களா?" என்றெல்லாம் கேட்காமல் அழ காக கவுன்சிலிங் செய்து அன்பாக பேசிக் கொண்டிருப் பதே பெரிய விஷயமாயிற்றே?

அதற்கு ஒரு மரியாதை தரவேண்டாமா?

"ஆமா... உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?"

சரி வேறு கேள்விக்கு வருகிறேன் என்று வந்தார்.

"இருக்கு சார்."



"அப்ப அது சார்ந்த விஷயங்கள்லேயும் நம்பிக்கை இருக்கணுமே?"

"அது சார்ந்த விஷயங்கள்னா..."

"ஜாதகம்- ஜோசியம்..."

"நோ சார்... கடவுள் நம்பிக்கைக்கும் அதுக்கும் என்ன சார் சம்பந்தம்?"

"என்ன பாஸ்கர் அப்படி கேட்டுட்டே. ஜாதகம்கறது உன்னைப் பத்தி கடவுள் எழுதியிருக்கிற சங்கேத பாஷைல உள்ள டயரி ஆச்சே?"

"அப்ப ஜாதகம்கறது உண்மையா சார்...?"

"அனுபவமில்ல உங்களுக்கு. அதான் அப்படி சொல் றீங்க?"

"எப்படி சார் அனுபவப் படணும்?"

"பீஷ்ம பட்டாச்சார்யான்னு ஒருத்தர். போய் அவரை சந்தியுங்க. உண்மையான ஜோதிடர். புட்டுப்புட்டு வைப் பார். அப்ப தெரியும் அது உண்மையா, பொய்யான்னு."

"அவர் எங்க இருக்கார் சார்...?"

"பாண்டிச்சேரி போற வழியில உள்ள இடைக்கழி நாட்டுல..."

"சரி சார்... நீங்க சொல்றதுக்காக நான் அவரைப் போய்ப் பார்க்கறேன்... எங்க எதிர்காலம் பத்தி என்ன சொல்றார்னும் கேட்கறேன்."

"அப்படியே செய். அவர் அட்வைஸ் படியே நடந் துக்கோ. உனக்கு அது எல்லா விதத்திலயும் நல்லது."

"எனக்கு நம்பிக்கை ஏற்படணும் சார். அறிவு பூர்வ மாவும் இருக்கணும். அப்ப நான் அவர் சொல்றத கேட் பேன். இல்லேன்னா தூக்கி எறிஞ்சுடுவேன்..."

"நீ முதல்ல சந்தி... அவரைப் பார்த்து பேசறதே அபூர்வம். உங்களுக்காக நான் வாய்ப்பு வாங்கித் தரேன். திவ்யா நீயும் கூடப் போ..."

"நிச்சயமா சார்..."

"சரி இப்ப கிளாசுக்கு போறீங்களா...?"

அவர் சிரித்தபடி கேட்க- இன்ஸ்டிட்யூட் ஹாலுக்குள் அவர்கள் நுழைந்தனர்!

## 5

*'**ஜோ**திட வித்தை என்பது லேசான ஒன் றல்ல... ஏடெடுத்து படித்தோ- வாத்யார் சொல்லிக் கொடுத்தோ மாத்திரம் வந்து விடுவதும் அல்ல. இது ஒரு பரம்பரைத் தொடர்புள்ள தர்மமும் பக்தியும் சார்ந்த கலை.*

*இது இரண்டும் இல்லாத ஒருவன் சோதிடம் கூறினால் அது ஜாதகக் கணக்குப்படி சரியாக இருந் தாலும் அவனது பிழைப்புக் கூற்றால் பொய்யாகிப் போகும்.*

*எனவே, ஜோதிடர்கள் பணத்தாசை இல்லாமல் பக்தியோடும், மந்திர உபதேசம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.'*

*-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா*

**பௌ**ர்ணமிச் சந்திரன் மேகக்கூட்டம் நடுவில் உருண்டு கொண்டிருந்தான். உலகில் எவ்வளவோ அழ கான விஷயங்கள். ,அதில் உன்னதமான அழகு- இந்த வானத்து வட்ட விளக்கு!

அதிலும் பௌர்ணமி சந்திரனை கடற்கரையில் இருந்து அந்த நீர்ப்பரப்புக்கு மேல் அது கடல் மங்கை இட்டுக் கொண்ட பொட்டு போலத் திகழும் போது பார்க்க வேண்டும்.

உடம்பெல்லாம் கண்ணாக இருக்கக் கூடாதா என்று ஆசை கொள்ளத் தோன்றும்.



நீர்ப்பரப்பும் பொங்கி எழும் அலைகளோடு வெள்ளிக் குழம்பாட்டம் தெரிந்து மினுமினுப்பு காட்ட, காற்று ஊடே புகுந்து குளிரைப் பூசிக் கொண்டு புசுபுசுவென்று வீசிக் கொண்டே ஓடி விளையாட.....

ரசனையே இல்லாத ஜென்மங்கள் கூட பேந்தப் பேந்த இந்தக் காட்சியில் ஐக்கியமாகி விடுவார்கள்!

சந்திரமௌலீஸ்வரனோ ரசனையின் சிகரம். விடு வாரா?

கடலோர மணல் வெளியில் வயர் நாற்காலியில் உட்கார்ந்தபடி வெள்ளி நிலா வானத்தையும், கூத்தாடும் சமுத்திரத்தையும் பார்த்து பரவசமான பரவசத்தில் இருந்தார்.

சொற்ப நாளில் ஆயுள் முடியப்போகிறது என்பது தெரிந்தபோது முதலில் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் என்றைக்கு இருந்தாலும், பிறந்தவர்கள் இறந்து தானே தீர வேண்டும் என்று மனதை தேற்றிக் கொண்டு விட்டார்.

ஆனால், இப்பொழுது சந்திர பிம்பத்தில் சஞ்சரிக்கும் இந்த நொடிப் போதில் அடடா ஆயுள் முடியப் போகிறதே என்று தோன்றிற்று.

சற்று தள்ளி நின்று கொண்டிருந்தது அவரது கார். அதில் பரபரப்போடு காத்துக்கொண்டிருந்தான் அஸ்வின்.

டாக்டர் அட்வைஸ்படி கொஞ்சம் கடற்காற்றில் இளைப்பாற வேண்டும் என்று அவரை தள்ளிக்கொண்டு வந்துவிட்டான்.

தேடிக் கொண்டு வருவது போல பாரிஜாதம் வர வேண்டும். வந்தவள் அப்படியே விஷயத்தை ஆரம்பிக்க வேண்டும். அது அவர்கள் எதிர்பார்த்தபடியும் இருக்க வேண்டும். இருக்குமா?

பாரிஜாதத்தின் சியலோ கார் அவன் எதிர்பார்த்தபடியே வெளிச்சத்தை பரட்டிக் கொண்டு வந்து சேர்ந்தது. அந்த

கடல்வெளிமேல் அஷ்வின் அமர்ந்திருக்கும் காரை ஓட்டி வந்து கச்சிதமாக நிற்க இறங்கினாள் பாரிஜாதம்.

சத்யமாக மகாலட்சுமியாட்டம் இருந்த பெண்மணி தான். இப்போது கணவனின் உடல்நிலை அவளை தணலில் வாட்டிய வாழை இலை போலாக்கிவிட்டது. அஷ்வினையே அது என்னவோ செய்தது.

"வாங்கம்மா..."

"சார் நல்ல மூட்ல இருக்காரா அஷ்வின்."

"இருக்கார்ம்மா. நான் கிட்டையே போகல. நீங்க போங்க."

"போறேன். பேசியும் பாக்கறேன். சோதிடர் சொன்ன மாதிரி சம்மதம் சொல்லிட்டா அது போதும் எனக்கு."

"கவலைப்படாதீங்க. கால நேரம் நமக்கு சாதகமாக இருக்கறதாதான் நினைக்கிறேன்."

அஷ்வின் தெம்பு தர பாரிஜாதம் சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அவரை நோக்கி நடந்தாள். அஷ்வின் பின்னாலேயே காரிலிருந்து இன்னொரு வயர்ச்சேரை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தான்.

அவரை நெருங்கி அருகில் விரித்துப் போட்டான்.

பாரிஜாதம் வந்து அமர்ந்து கொண்டாள்.

"என்ன... இங்கேயும் வந்துட்டியா?" அவர் செல்லமாக ஆரம்பித்தார்.

"ஏன் வரக்கூடாதா... இந்த கடற்கரைல உக்காந்து பௌர்ணமியை நீங்கதான் அனுபவிக்கணுமா?"

"இல்ல பாரிஜாதம் சும்மாதான் கேட்டேன். நீயும் அனுபவி. இப்பதான் உன்னைப் பத்தியும் நினைச்சேன். இதேபோல நாம இரண்டு பேரும் அமெரிக்கால மிஸிஸிபி கடற்கரைல ஒரு பௌர்ணமி ராத்திரியை அனுபவிச்சிருக்கோம். ஞாபகம் இருக்கா?"



"பரவால்லியே. அதெல்லாம் கூட உங்களுக்கு ஞாபகம் இருக்கா?"

"என்ன பாரிஜாதம். இதுதான் சாக்குன்னு ஒரு குத்து குத்தறியா?"

"குத்தலை. சந்தோஷப் படறேன். இதேபோல நீங்க ஒவ்வொரு பௌர்ணமியையும் பாக்கணும்."

"அது பேராசை பாரிஜாதம். இன்னும் மூன்று பௌர்ணமி தாங்கறது எனக்குத் தெரியும்."

"இல்ல. நீங்க மூன்னூறு பௌர்ணமிக்கு இருப்பீங்க. இன்னிக்கு கூட நம்ம கம்பெனி எம்ப்ளாயீஸ்ல நூறுபேர் உங்க உடல் நலனுக்காக மெட்ராஸ்ல இருந்து திருப்பதிக்கு நடந்தே போறாங்க."

"நடந்தா... நான்சென்ஸ்... என்ன இது பைத்தியக்காரத் தனமா..."

"உங்களுக்குப் பைத்தியக்காரத்தனம். ஆனா அவங்களுக்கு அது முதலாளி விசுவாசம்."

"இதை ஏன் நீ முன்னாடியே சொல்லலை, அஷ்வின்.. அஷ்வின்..."

"அவனை எதுக்கு கூப்பிடறீங்க? அவனுக்கும் இதுக்கும் சம்மந்தமில்லை."

"என்ன பாரிஜாதம் நீ... எவ்வளவு பெரிய விஷயம் சாதாரணமா சொல்றே?"

"பெரிய விஷயம்தான். நீங்க நல்லா இருக்கணும்கற அக்கறையும் ஆசையும்தான் காரணம்."

"இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு நன்மை செய்யற துக்காகவாவது நான் கொஞ்ச நாள் இருந்தா நல்லதுன்னு தோணுது பாரிஜாதம்."

"அதுக்குதான் நான் கலபமா ஒரு வழி சொன்னேன்."

"என்ன வழி?"

"கல்யாணம்...!"

"நான்சென்ஸ்... ஆரம்பிச்சுட்டியா?"

"என்னங்க நீங்க... ஒரு முயற்சிதானே?"

"அதுக்கு ஒரு பொண்ணோட வாழ்க்கையை பலிகொடுக்கவா?"

"அது பலி இல்லீங்க... முழு விருப்பத்தோட நடக்கப் போற ஒண்ணாதான் நான் அதை பாக்கறேன். ஏழைப் பொண்ணா பாக்கறேன். வாழ்க்கை கொடுத்த மாதிரி ஆகாதா..."

"சரி, யாரோ ஒரு பொண்ணு சம்மதிக்கறான்னே வெச்சுப்போம். அதனால என் வாழ்க்கைல ஆயுள் கூடும்கறதுக்கு என்ன உத்தரவாதம்?"

சந்திரமௌலீஸ்வரன் பேச்சில் ஒரு மாறுதல் தெரிந்தது. ராமநடராஜ தீட்சதர் சொன்னது போல, எல்லாம் சந்திர பிம்பம் செய்யும் சாகஸமா?

"உத்தரவாதத்தை நீங்களே உணரலாம். கல்யாணம் ஆன அடுத்த வாரமே உங்களுக்கு ஹார்ட்ல சர்ஜரி பண்ணப் போறாங்க. இப்ப செய்தா அது ஆபத்தான துங்கறது டாக்டர்கள் முடிவு. அப்புறமா செய்தா, நிச்சயம் வரப்போற பெண்ணோட மாங்கல்ய பலம் உங்களுக்குத் துணை செய்யும்னு ஜோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா சொல்லியிருக்கார்..."

"சரி, ஆகலைன்னு வை... அந்த பொண்ணோட கதி?"

"என்ன சார் கெட்டுப் போச்சு... இன்னொரு கல்யாணத்த பண்ணி வெச்சிடறோம். ஆனா 'தயவு செய்து அப்படி மட்டும் சொல்லிடாதீங்க..." என்றபடி அஷ்வின் அவர்கள் உரையாடலில் உட்புகத் தொடங்கினான்.

"என்ன அஷ்வின்... இதுல உன் பங்கு என்ன?"

"அம்மா சொல்றத செய்யறதுதான் சார்..."

"அது சரி... வெளிய தெரிஞ்சா சிரிக்கமாட்டாங்க?"

"தெரிஞ்சாதானே சார்...?"



"அப்ப என்னை ரகசிய கல்யாணம் பண்ணிக்க சொல்றியா" அந்த கேள்விமுன் மௌனித்தான் அஷ்வின்.

சந்திரமௌலியும் கிட்டதட்ட இறங்கிவந்து விட்ட மாதிரியே தோன்றியது.

"என்னய்யா பேச்சக்காணோம். நான் ஒரு கௌரவமான இண்டஸ்டிரியலிஸ்ட். என்னை ரகசிய கல்யாணம் பண்ணிக்க சொல்றியா நீ?"

"அதுதான் சார் எல்லாருக்கும் நல்லது..."

"மண்ணாங்கட்டி... நல்லதாம் நல்லது... உங்க புத்தி ஏன் இப்படிப் போகுது?"

"சார் தயவுசெய்து மறுக்காதீங்க. இதை ஒரு பரீட்சையா நினைச்சு எழுதித்தான் பாருங்களேன்."

"சரி... எனக்கு அதன் பிறகும் ஏதாவது ஆனா நான் சொல்றபடி செய்யணும். செய்வியா?"

"சொல்லுங்க சார்"

"நான் ரகசிய கல்யாணம் பண்ணிக்கறேன். அதன்பிறகு எனக்கு ஏதாவது ஆனா என் அவ்வளவு சொத்தும் அந்த பொண்ணுக்குதான். பாரிஜாதம் உனக்கு கால்காசு கூட கிடையாது. சம்மதமா..."

சந்திரமௌலி எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்தார். பாரிஜாதம் ஒரு விநாடி ஸ்தம்பித்தாள்.

"அம்மா, சரின்னு சொல்லுங்க. அப்படி நிச்சயமா ஆகாது" அஷ்வின் நம்பிக்கையளித்தான். அவள் கலக்கமுடன் பார்த்தாள்.

"இதுக்கு சம்மதம்னா சொல்லுங்க. நான் ரெடி. இப்படி உம்முன்னு உக்காந்து பாக்கறதை பார்த்தா பயப்படற மாதிரி தெரியுதே..."

"அம்மா சரின்னு சொல்லுங்கம்மா. பட்டாச்சார்யா சொன்னா சொன்னதுதான். நிச்சயமா நடக்கும்மா. கல்யாணம் ஆனா சாருக்கு ஏதுவும் நடக்காது..."

"சரி!" ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு எழுந்த பாரிஜாதம் சந்திரமௌலியையே சற்று கோபத்தோடு பார்த்து "நீங்க போனப்புறம் நான் மட்டும் உயிரோட இருப்பேன்னு நினைச்சீங்களா?" என்று கண்கள் கலங்க கேட்டாள்.

அஷ்வின் அதை எல்லாம் கவனிக்காமல் அப்போதே பட்டாச்சார்யாவை பார்த்து 'பெண் எங்கே?' என்று கேட்கும் தீவிரத்துக்குள் நுழைந்து விட்டான்.

பின்னர் அவர்கள் புறப்பட்டுப் போனார்கள்.

வெள்ளி நிலா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

சந்திரபிம்பம் சாதித்து விட்டது போல் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்தது.

## 6

*'விதியும் மதியும் இணைந்த பிறப்பில் மனிதப் பிறப்புக்குத்தான் ஆறாம் அறிவு. அதன் கீழான அறிவு கொண்டவை உடற்கூற்றுக்கேற்ப உணர்வு பூர்வமாக செயல்பட்டு மடியும். அங்கே பாப மில்லை. புண்ணியமில்லை.*

*விதியும் மதியும் இணைந்த மனிதன் தன் அறிவால் விதியைப் பற்றியறிந்து பின் அதை வெல்லும் வழியையும் அறிந்து வெற்றி பெற்று தன் விதியைத் தானே எழுதிக் கொள்ளலாம். அப்படி எழுத முனையும்போது தர்மம் மட்டும் பிசகிவிடக் கூடாது...'*

*-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா*

**மீண்டும் இடைக்கழிநாடு!**

மீண்டும் பட்டாச்சார்யா சந்திப்பு...



பட்டாச்சார்யாவும் புரிந்துகொண்டார்.

"என்ன... உன் முதலாளி சம்மதிச்சுட்டாராக்கும்?"

"ஆமாம் சாமி. ரொம்ப கஷ்டப்பட்டு சம்மதிக்க வெச்சோம்.

"சந்தோஷம். இப்ப என்ன. பொண்ணு எங்க இருக்கான்னு பார்த்துச் சொல்லணுமா?"

"ஆமா... பாத்துச் சொல்றது மட்டுமில்ல. கல்யாணமும் நீங்களே பண்ணி வைக்கணும்."

"நான் இதை எல்லாம் விட்டு ஒதுங்கி இருக்கேன். விட மாட்டேங்கிறியே தம்பி."

"சாமி. இந்த ஒரு விஷயத்துல மட்டும் நீங்க உதவி செய்துதான் தீரணும்."

"ஒவ்வொருத்தரும் இப்படித்தாம்ப்பா சொல்லிண்டு வரா."

"நீங்க ஏன் சாமி இப்படி ஒதுங்கணும். எல்லாருக்குமே உங்க வித்தை பயன்படும்படி செய்யலாமே..."

"அப்படி எல்லாம் செய்யக் கூடாது. ஜோசியம்கறது ரகசிய சாஸ்த்ரம். அதை எப்படி எப்படி பயன்படுத்தணும்னு இருக்கு. இப்ப அதை அநியாயத்துக்கு ஒரு வியாபாரம் ஆக்கிட்டா. இதனால சாஸ்திரம் பொய்யா போயிடறது. அதுமட்டுமில்ல, அந்த பாவத்தை சம்மந்தப்பட்ட ஜோசியன்தான் சுமக்கணும்."

"இதுல இப்படி எல்லாம் கூட இருக்கா..."

"இன்னும் இருக்கு. நான் சுருக்கமா சொல்லியிருக்கேன்."

"சரி சாமி... எப்படியாவது ஐயா கேஸ்ல மட்டும் உதவி செய்துடுங்க. அது போதும்."

"அனேகமா இது நான் செய்யற கடைசி உதவியா இருக்கும். இதுக்கு பிறகு நான் சன்யாசம் வாங்கிக்கப் போறேன். இந்த ஊர்லயும் இருக்கப் போறதில்ல..."

பட்டாச்சார்யா குரலில் உறுதி தொனித்தது. அஸ்வின் அதற்காக சற்றுக் கவலைப்பட்டான். அவன் வரையில் எல்லாவற்றிலுமே விஞ்ஞானப் பார்வைதான். இருந்தும் அவனை ராமநடராஜ தீட்சதர் ஒருவரே அசத்தி எடுத்து விட்டார்.

வாழ்க்கை என்பது நீ தீர்மானிப்பது போல தீர்மானமாவதில்லை. அது தீர்மானிக்கின்ற மாதிரிதான் நீ சிந்திக்கிறாய், பேசுகிறாய் என்று அவர் கூறியபடிதான் எல்லாம் நடந்தது.

கிருஷ்ணனோ கிளிண்டனோ அனுபவங்களை மறுத்து விட முடியாதே! தனக்கு ஏற்பட்ட அனுபவங்களால் அஸ்வினும் அயர்ந்துதான் போனான்.

அதனால்தான் வயதுக்கு மிஞ்சிய ஈடுபாட்டை இம்மட்டில் காட்டிக் கொண்டிருக்கிறான்.

"சரி... நீ நாளைக்கு வா. நான் பெண் இருக்கிற இடத்தைச் சொல்றேன்."

அவர் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார்.

"அப்படியே அந்த பொண்ணோட குடும்பத்துகிட்ட பேசி சம்மதமும்..."

"அது உன்பாடு. ஆமா சாதி வித்தியாசமெல்லாம் பாக்க வேண்டாம்தானே?"

"என்ன சாமி நீங்க. பொண்ணு கிடைக்கறதே பெரிசு. இதுல சாதி போய் பாத்துகிட்டு."

"நான் உண்மையை சொல்லித்தான் சம்மதம் கேட்பேன். நிச்சயம் கல்யாணம் பண்ணிகிட்டு வாழ வரப்போற பொண்ணுக்கு தாம்பத்ய சுகம் இருக்க வாய்ப்பில்லை. அதை அவ இழந்துதான் தீரணும். அதுக்கு பதிலுக்கு அந்த பொண்ணுக்கு சொத்துல பங்கு தந்துடணும்."

"பங்கு இல்லீங்க. சொத்தே அவங்களுக்குதான். இதை நான் சொல்லலை. எம். டி. சாரே சொன்னார். ஒருவேளை ஜோசியம் பலிக்காம அவர் இறந்துட்டா மொத்த



சொத்தும் அந்த பொண்ணுக்குதான்... இப்ப இருக்கற முதல் சம்சாரமான பாரிஜாதம்மாவுக்கு கூட கிடையாது."

"அடேயப்பா... உன் முதலாளிக்கு ஆனாலும் பெரிய மனசப்பா..."

"அதனாலதாங்க அவருக்காக, இந்த பாடுபடறோம்."

"சந்தோஷம் நீ நாளைக்கு வா."

"அதுக்குள்ற நிச்சயம் அப்படி ஒரு பொண்ணு கிடைச்சுடுவாங்களா?"

"எனக்கு சகுனங்கள்ல நம்பிக்கை அதிகம். அதன்படி நீ எதிர்பார்க்கிற அந்தப் பொண்ணு இந்த நிமிஷம் என்னைப் பார்க்க கிளம்பியிருக்கணும். அப்படி இல்லேன்னாலும் என்கிட்ட இருக்கிற எவ்வளவோ ஜாதகங்களை வெச்சு அப்படி ஒரு பொண்ணை நான் கண்டறிய முடியும். நீ போய்ட்டு வா."

அவர் விடை கொடுத்தார். அவனும் புறப்பட்டான். நாளை வரும்போது அவர் எந்தவிதமா சமாதானமும் சொல்லிவிடக் கூடாதே என்று கவலையும் பட்டான்.

**மா**லை வேளை... பீஷ்மபட்டாச்சார்யாவின் வீட்டைக் கண்டறிந்து உள் நுழைந்தனர் திவ்யாவும் - பாஸ்கரும். கையில் பிரின்சிபாலின் சிபாரிசுக் கடிதம். அது துல்லியமாக வழிகாட்டியிருந்தது.

"நமஸ்காரம்."

"என்ன விஷயம்?"

"வித்யா டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் பிரின்ஸிபால் அனுப்பி வந்துருக்கோம்."

"என்ன... காதலிக்கிறீங்களாக்கும்?" பட்டாச்சார்யா நெட்டுக்குத்தாக விஷயத்தை தொட்டார். "உங்க ஜாதகம் பொருந்தறதான்னு பாக்கணும். அவ்வளவு தானே?"

"ஆமாம் சாமி..."

"ஒருவேளை பொருந்தலைன்னு நான் சொன்னால் என்ன செய்வீங்க? பிரிஞ்சி போயிடுவீங்களா?"

"அது எப்படி சாமி... காதலிச்சது பிரியறதுக்காக இல்லையே."

"உண்மைதான். ஆனா காலம் அதுவா பிரிச்சிடுமே. அப்ப என்ன பண்ணுவீங்க?"

"அப்படி நடக்காது. நடக்கவும் விடமாட்டோம்."

"அப்ப எல்லாம் உங்க கையில இருக்குன்னு நீ நம்பறே?"

"ஆமா... அதுல என்ன சந்தேகம்?"

"சரி, ஜாதகத்தை கொடுங்க பாக்கறேன்."

அவர் கேட்க, அவர்கள் கொடுத்தனர். அவர் பார்வை ஜாதகத்தை எடை போடத் தொடங்கியது. திவ்யாவும்-பாஸ்கரும் துளையிடுவது போல பார்த்துக் கொண்டனர்.

'உலகத்தில்தான் எத்தனை புதிர்கள்?' என்கிற கேள்வி அந்த பார்வையில் ஓடிக்கொண்டிருந்தது.

இவர் ஒருவேளை நீங்கள் இணைவது சாத்யமில்லை என்று கூறினால் என்ன செய்வது என்கிற கேள்வியும் பெரிதாக விஸ்வரூபம் எடுத்தது.

அப்படியே நைஸாக நழுவி வெளியில் வந்தனர். பட்டாச்சார்யா பேனா பேப்பரோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டின் வெளிப்புறச் சூழ்நிலை மகா ரம்யமாக இருந்தது. சாதாரணமாக வந்திருந்தால் சூழ்நிலையை ரசிப்பதில் புத்தி போயிருக்கும். அங்கிருக்கும் பூக்களோடு திவ்யாவைப் பொருத்தி ரசித்திருப்பான் பாஸ்கர்.

இப்பொழுது முடியவில்லை. மனதில் எந்த விஷயம் மூட்டம் போடுகிறதோ அதற்கேற்பதான் புத்தி போகிறது-அதைப் பற்றியே கவலை, அதைப்பற்றியே சிந்தனை...

"என்ன பாஸ்... என்ன யோசிக்கிறே?"



"இல்ல... தேவையே இல்லாம நாம இவர்கிட்ட வந்து மாட்டிகிட்டோமோன்னு நினைக்கறேன்."

"எதுக்காக அப்படி சொல்றே?"

"ஒருவேளை ஜாதகம் உண்மையா இருந்து இவர் என்னையும் நான் இப்ப போட்டுருக்கற திட்டத்தையும் கண்டுபிடிச்சுட்டா?"

"நீ அப்ப ஜாதகத்தை உண்மைன்னு நினைச்சு பயப்படறியா?"

"பயப்படலை... இது ஒரு யூகம். அவ்வளவுதான்!"

"எப்படி வார்த்தையை மாத்தி சொன்னாலும் அவர்கிட்ட நாம எதையும் தெரிஞ்சுக்க வரலை. அவரைப் பயன்படுத்திக்கத்தான் வந்துருக்கோம்."

"சரி, இப்ப நம்ம ஜாதகம் பொருந்தலைன்னு சொல்லிட்டார்னா என்ன பண்ணுவே?"

"சரி சாமி... நாங்க பொருத்தம் பார்க்க மட்டும் வரலை. வேற விஷயத்துக்காகவும்னு சொல்வேன்."

"எனக்கு என்னவோ பயமா இருக்கு பாஸ்கர்..."

"பயப்படாதே... ஜாதகம்கறது என்னன்னு தெரிஞ்சா தானே அதை எதிர்த்து ஜெயிக்க முடியும்? அதுக்கு தான் இந்த அனுபவத்துக்கு நான் உன்னை துணைக்கு கூப்பிடறேன். அதோட மிகச் சுலபமா யாரையும் ஏமாத் தாம முன்னுக்கு வர இது ஒரு வழி... உனக்கும் சரி, எனக்கும் சரி வாழ்க்கைல எது எப்படியோ ஜாதகத்தை புரிஞ்சுக்க ஒரு சந்தர்ப்பம் வந்துருக்கு. அதை எதிர்த்து வாழ்ந்து காட்டி ஜாதகம் பொய்யின்னு ஆக்குவோம்..."

அவர்கள் இருவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். அப்படியே திரும்பி வந்தார்கள். பட்டாச்சார்யா கணக்குப் போட்டு ஒரு முடிவுக்கு வந்திருந்தார். வந்த நிலையில் இருவரையும் ஏறிட்டுப் பார்த்தார். உதட்டில் மெலிதான நமட்டுச் சிரிப்பு.

"என்ன, ஜாதகத்தை எதிர்த்து வாழ்ந்து காட்றதுன்னு முடிவா?" ஆப்பிள் நறுக்கின மாதிரி ஒரு கேள்வி அது.

"ஆமாம்... நீங்க பாசிடிவா சொன்னாலும் சரி நெகடிவா சொன்னாலும் சரி..."

"பாசிடிவாதான் சொல்லப் போறேன். நீங்க இரண்டு பேரும் சேர்ந்து வாழறதுல எந்த பிரச்சினையும் கிரக ரீதியா இல்லை..."

பட்டாச்சார்யா அவர்கள் எதிர்பார்த்திராத பதிலைச் சொல்லி ஒரு அசத்து அசத்தினார்.

இருவரும் மலங்க மலங்க பார்வையால் முட்டிக் கொண்டனர்.

"என்ன பாக்கறேன்... உங்க ஜாதகம் அமோகமாக பொருந்தறது. நீங்க கல்யாணம் பண்ணிண்டா ஒத்துமையா சந்தோஷமா வாழலாம். அதில் எந்த சிக்கலும் இல்லை..."

"அது... அது நீங்க நிச்சயம் பிரச்சினை இருக்குன்னு சொல்வீங்கன்னு நினைச்சு ஜாதகத்தை எதிர்க்கறதுன்னு முடிவு பண்ணிட்டோம்..."

"அப்படியா... ஆமா ஜாதகம் மேல ஏன் இவ்வளவு அவ நம்பிக்கை?"

"ஆமா சாமி... ஜாதகம்கறது உன் வாழ்க்கைல உனக்கு இது இது இவ்வளவுதான்னு சொல்லி முடிச்சிடுது. சிலரை குபேரன்னு சொல்லுது. சிலரை பிச்சைக்காரன்னு சொல்லுது.

உழைப்பும் முயற்சியும் இருந்தா யாரும் எவ்வளவு தூரமும் முன்னேறலாம்னு இருந்தாதானே நல்லா இருக்கும்?"

"இப்ப கூட அப்படித்தானேப்பா இருக்கு. உழைப்பும் முயற்சியும் இருந்தாதான் யாரும் முன்னேற முடியும்?"



"எங்க சாமி... எனக்கு தெரிஞ்ச எவ்வளவோ பேர் இதெல்லாம் இருந்தும் முன்னுக்கு வந்துருக்காங்க. எந்த உழைப்புமில்லாமலும் முன்னுக்கு வந்துருக்காங்க. அதுதான் புரியல..."

"அங்கதான் ஜாதகம் பேசுது..."

"என்ன சொல்றீங்க?"

"கடுமையா உழைச்சு முயற்சி செய்தும் சிலர் முன்னேற முடியலைன்னு சொன்னே இல்லியா?"

"ஆமா..."

"உன் கருத்துப்படி அல்லது ஆசைப்படி ஜாதகம்னு ஒன்னு இல்லேங்கற நிலைல ஒரு மனிதன் தன் முயற்சிக்கு ஏற்ற வெற்றியை அடைஞ்சிருக்கணும்தானே?"

"நிச்சயமா..."

"ஆனா நீ அப்படி இல்லேங்கற மாதிரியும் சொன்னே?"

"ஆமா..."

"அங்கதான் ஜாதகம் வேலை செய்யறதா நான் சொன்னேன்."

"எப்படி...?"

"நீ இப்போதைக்கு எப்படி நடந்து கொண்டாலும் பூர்வ ஜென்ம புண்யஸ்தானக் கணக்குக்கும் உன் பாவ புண்யங்களுக்கும் ஏற்பத்தான் அந்த முயற்சிக்கு பலன் கிடைக்கும்."

"நான் இல்லேன்னு சொல்லத்தான் விரும்பறேன் சாமி."

"அப்படின்னா முழு வெற்றி நிச்சயம்னு நீ நம்பறியா?"

"ஆமாம் சாமி. திட்டமிடுதல். கடின உழைப்பு. இது போதும். வெற்றி நிச்சயம்."

"அப்ப... இவைகள்லாம் இருந்தும் சிலர் முன்னேற முடியாமல் இருக்கக் காரணம்?"

"அவர்கள் கிட்ட அவர்களுக்கே தெரியாம ஏதோ ஒரு முட்டாள்தனம் இருக்கணும்."

"அந்த முட்டாள்தனத்துக்கு காரணமா ஏன் அவர்கள் விதி இருக்கக் கூடாது?"

"முட்டாள்தனம்கற அறியாமையை கல்விங்கற ஒன்றால போக்கிட முடியும் சாமி."

"அந்தக் கல்வி கிடைக்கவும் விதி வேணும் அப்பனே..."

"இப்படி விதண்டாவாதமா பேசிகிட்டே போகலாம்."

"இல்ல... நான் சொல்றதுதான் உண்மை. சத்தியம்."

"அப்ப எனக்கு நிரூபியுங்க."

"சரி... உன் ஜாதகப்படி நீ எந்த நிலையிலும் கோடீஸ்வரனாக- ஏன் ஒரு லட்சாதிபதியாகக் கூட வாய்ப்பு இல்லை. இந்த ஜென்மத்துல நீ ஒரு மாச சம்பளக்காரன் தான்னு உன் ஜாதகம் சொல்லுது. இதை உன். உழைப்பு, முயற்சி திட்டமிடுதலால் மாற்றிக் காட்ட முடியுமா?"

பட்டாச்சார்யா எதையோ உத்தேசித்தே பேச்சை இப்படி விவாத பூர்வமாக வளர்த்துகிறார் போல தோன்றியது.

"இதுக்கு நான் சம்மதிக்கிறேன். என் திவ்யா என்கூட இருக்கும்போது என்னால எந்த உயரத்தையும் அடைய முடியும்னு நான் நம்பறேன்."

"உன் நம்பிக்கையை பாராட்டறேன். ஆனா, அது சாத்யமில்லை. ஏன்னா இன்னிக்கு உலகம் இருக்கற இருப்புல திருடக்கூட ஒரு சாமர்த்தியம் வேணும்..."

"நீங்க என்ன சொன்னாலும் சரி. ஒரு மனுஷன் முன்னுக்கு வர நிச்சயம் இப்படி சேலஞ்ஜா ஏதாவது



ஒண்ணு வேணும். அப்பதான் அவனுக்கு ஒரு வேகம் வரும். உங்களை சந்திச்சதுல எனக்கு அது ஏற்பட்டதுக்காக நான் மகிழ்ச்சி தான் அடையறேன்."

"அப்ப நீங்க எதுக்கு என்னை வந்து சந்திக்கணும். ஜாதகத்தை நம்பறவங்கதானே என்னை வந்து பார்ப்பாங்க."

"புத்திசாலித்தனத்தை நம்பறவங்களும் உங்களை வந்து பார்க்கலாம். எப்படின்னு கேக்கறீங்களா?"

பாஸ்கர் புதிர் போட்டான். பட்டாச்சார்யா அவனைப் பார்த்து சற்று அதிர்ந்தார். பின் கேட்டார்.

"என்னப்பா புதிர் போடறே?"

"புதிர்தான். உங்ககிட்ட எங்க ஜாதகத்தை கொடுத்த நாங்க இரண்டு பேரும் நீங்க எங்களைப் பத்தி குறிப்பா என்னைப் பத்தி என்ன சொல்லப் போறீங்கன்னு பார்த்தேன். ஆனா நீங்க நான் எதிர்பார்த்த பதிலைச் சொல்லவே இல்லை."

பட்டாச்சார்யாவுக்குள் படபடப்பு பெருகத் தொடங்கியது.

சாதாரணமாக தான் பிறரை மடக்கித்தான் பழக்கம். தன்னால் பிறருக்கு வியப்பு ஏற்படுத்தான் பழக்கம்.

ஆனால் தனக்கே ஒருவன் வியப்பை அளிக்கிறான் என்றால் இவன்...?

பாஸ்கர் அவரைப் பார்த்துச் சிரித்தான். சிரிப்பா அது...? லட்டு கல் விட்டெறிந்தது.

"உங்களுக்கு சாமுத்ரிகா லட்சணம் தெரியும்னு கேள்விப்பட்டேன். அதன்படி நீங்க என்னை பத்தி என்ன நினைக்கிறீங்கன்னு சொல்லுங்க பார்ப்போம்." கேட்டபடியே ஒரு சீ செயினை எடுத்து சுழற்றினான். பட்டாச்சார்யா அடுத்த கணம் அவனை புலிப்பார்வை பார்த்தார்.

நல்ல இளமை

ஐந்தரை அடி உயரம்

ஆனால் சுருளல் இல்லாத படிய வாரிய தலைமுடி!

சின்ன கண்கள்...

சற்றே வாத்தைப் போன்ற நாசி...

முகத்தில் மீசையில் அவ்வளவு நெருக்கம் இல்லை.

பற்களின் வரிசையில் இரு சிங்கப் பற்கள்.

குட்டையான கழுத்து...

இப்படி எல்லாம் அங்கலட்சணம் இருந்தால் அவர்கள்... அவர்கள்... வாழ்க்கையில் எப்பேற்பட்ட ரிஸ்க்கும் எடுக்கத் துணிவார்கள். நெருப்பில் குதிக்கக் கூட அஞ்ச மாட்டார்கள். இவர்களுக்கு எதிலும் ரிசல்ட் தான் முக்கியம்...

பட்டாச்சார்யா அவசியமில்லாமல் ஒருவரை கணிப்பதில்லை. அஷ்வின் கூட எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்று சொன்னதால்தான் அவனை தனக்குள் தேடிப்பிடித்தார்.

இவனோ ஒரு படி மேலே போய் விட்டான்.

அவருக்குள்ளும் அகப்பட்டு முடிய அவன் அவரை அரைச் சிரிப்போடு பார்த்த வண்ணமிருந்தான்.

"என்ன சாமி என்னை கண்டுபிடிக்க முடியலியா? என் நினைப்பும் புரியலியா" திரும்பவும் கேட்டான்.

"என்னை மன்னிச்சிடுப்பா... எனக்கு உன்னை யார்னு தெரியலை. நீயே சொல்லிடேன்..."

"அப்ப அஷ்வினைப் பத்தி மட்டும் எப்படி அவ்வளவு சரியா கண்டு பிடிச்சீங்க?" அவன் கேட்ட பதில் கேள்வியில் ஏகப்பட்ட ஆச்சரியங்கள்...

"அஷ்வின்... அஷ்வின்... யார் அந்த தொழிலதிபர் சந்திரமௌலியோட பி.ஏ.வா...?"

"அவனேதான்... அவன் என் கிளாஸ்மேட்!"



"அப்படியா... சரி இப்ப அவனைப் பத்தி எதுக்கு பேசறே?"

"இல்ல... அவன் உங்ககிட்ட எதை எதிர்பார்த்து வந்தானோ அதைக் கொடுக்க முடிஞ்சவன் நான். அதனால கேட்டேன்."

"அப்படின்னா இந்த பொண்ணு..."

"என் காதலிதான்- அதே சமயம் நீங்க சொன்ன சாஸ்திரப்படி பரிகாரப்படி புஷ்ய நட்சத்திரத்துல புஷ்பவதியானவ. அதாவது இந்த நொடிப் பொழுதுல அந்த தொழிலதிபருக்கு தேவையான பெரிய பொக்கிஷமே இவதான்."

அவன் எங்கே வருகிறான் என்பது அவருக்கு புரிந்து போயிற்று. தனக்கு நேரிட்ட சகுனப்படி தான் எதிர்பார்த்த பெண்ணும் எதிர் வந்து நின்று விட்டாள். ஆனால், இப்படி ஒருவன் காதலியாகவா வந்து நிற்பாள்...?

"என்ன சாமி சிந்தனை... நான் சொல்றதுல நம்பிக்கை இல்லையா...நீங்கதான் ஜாதகத்துல ஜித்தர் ஆச்சே... இவ ஜாதகத்தை பாருங்க. அந்த நட்சத்திரத்துல புஷ்பவதியானது துல்லியமா தெரியும்..."

"சரி... இப்ப அதுக்கு என்ன?"

"இந்த பொண்ணு அந்த சந்திரமௌலியை கல்யாணம் பண்ணிக்கத் தயார் சாமி. நீங்க அதுக்கு ஏற்பாடு செய்யணும்."

"அப்புறம் நீ என்ன பண்ணுவே?"

"நான் நேரடியா விஷயத்துக்கு வரேன். வாழ்க்கைல நானும் சரி- இவளும் சரி நிறைய கஷ்டம்தான் பட்டுருக்கோம். ஆனா நாங்க ரொம்ப பிராக்டிகலா திங்க் பண்றவங்க. எங்களுக்கு ஜோசியம் ஜாதகத்துல எல்லாம் நம்பிக்கை கிடையாது.

ஆனா எனக்கு எல்லா வகையிலும் என் நண்பன் அஷ்வின் நேர் எதிர். அவன் மூலமா தான் இந்த விஷயங்கள் தெரியவந்தது. ஒரு ஆச்சரியம் இல்லே அதிசயம்னே வெச்சுக்குங்களேன். அஷ்வின் தேடற அதாவது உங்க மூலமா அஷ்வின் தேடற அந்தப் பொண்ணு என் காதலியா இருந்ததுதான் ஆச்சரியம்.

இதை நான் திவ்யாகிட்ட சொன்னப்போ திவ்யா நான் கூட புஷ்ய நட்சத்திரத்துலதான் புஷ்பவதியானேன்னு சொன்னா... அப்பதான் எனக்கு பளிச்சுன்னு ஒரு எண்ணம் தோணிச்சு. மிஸ்டர் சந்திரமௌளீஸ்வரன் உடல் நிலை பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கேன். டாக்டர்கள் கிட்டேயும் தகவல் சேகரிச்சேன்.

தலைகீழா நின்னு தண்ணி குடிச்சாலும் அவர் மூணு மாசத்துக்கு மேல உயிர் வாழ முடியாதுன்னு சொன்னாங்க.

ஆனா உங்க ஜோசிய சாஸ்திரமோ அவருக்கு திவ்யா மாதிரி ஒரு பெண்ணோட கல்யாணம் நடந்தா அவர் பிழைச்சுக்குவார்னு சொல்லுது. டாக்டர்கள் சொல்றது சரியா? இல்லை நீங்க சொல்றது சரியா?

நாங்க கேட்டுக்கிட்டோம். நானும் சரி, திவ்யாவும் சரி, டாக்டர்கள் சொல்றதை நம்பறோம். அதாவது மிஸ்டர் சந்திரமௌளி இறந்துதான் தீரணும். இயற்கைக்கு மாறா அவர் வாழ முடியாதுங்கறது எங்க நம்பிக்கை.

அதே சமயம் உங்க நம்பிக்கைக்கும் உதவியா இருக்க விரும்பறோம். அதாவது என் காதலி திவ்யா சந்திரமௌளியை கல்யாணம் செய்துக்க தயார்... அப்படி கல்யாணம் நடந்து மிஸ்டர் சந்திரமௌளி வாழ்ந்துட்டா உங்க ஜாதகம் உண்மை... சாஸ்திரம் உண்மைன்னு நான் ஒத்துக்கறேன்.

இல்லைன்னு ஆயிட்டா புத்திதான் பெரிசு, திட்டமிடுதல்தான் பெரிசுன்னு நீங்க ஒத்துக்கணும். என் கணிப்புபடி மட்டும் எல்லாம் நடந்துட்டா கோடீஸ்வர திவ்யாவை நான் மறுமணம் செய்து நானும் கோடீஸ்வரனாயிடுவேன். என் காதலும் வாழ்ந்துடும். சரிதானே?"



பாஸ்கர் நீளமாக தன் திட்டத்தை கூறிவிட்டு கேள்வியும் கேட்டான்.

"சரி... சந்திரமௌளி குணமாயிட்டா என்ன பண்ணுவே. காதலை தலை முழுகிடுவியா?"

பட்டாச்சார்யா பதில் கேள்வி கேட்டார்.

"முழுகித்தானே ஆகணும்?"

"தெரியும்... நீ பெரிய பெரிய ரிஸ்க் எடுக்கற ஒரு கேரக்டர்தான். அதான் காதலியையே பணயமா வெச்சு வாழ்க்கையோட விளையாட முடிவெடுத்துட்டே. ஏம்மா... இதுல உனக்கு முழு சம்மதமா?"

திவ்யா மௌனமாக நின்றாள்.

"இப்படி மௌனமா நின்னா என்ன அர்த்தம்?"

"ஏதோ ஒரு விதத்துல நான் இதுக்கு சம்மதிக்கறேன்னு தானே இதுக்கு அர்த்தம்..."

"அதுசரி... ஒரு ஆண் இப்படி வீராப்பா திட்டமிடறதும் முடிவெடுக்கறதும் பெரிய ஆச்சரியமில்லை. ஆனா ஒரு பெண் அதுக்கு உடன்படறது எனக்கு ஆச்சரியம்தான்..."

"நான் வாழ்க்கைல மத்த பெண்களைப் போல இல்ல சாமி... ஆண் பெண்ணுன்னு பேதப்படுத்தி செயல்களைப் பிரிக்கிறதுலயும் எனக்கு உடன்பாடு இல்லை... இந்த கல்யாணம் ஒரு வகைல நான் எழுதப்போற பரீட்சை. கட்டாயம் நான் பாஸ் ஆயிடுவேன்."

"அதாவது மிஸ்டர் சந்திரமௌளி இறந்துடுவார். சொத்து உனக்கு வந்துடும்னு சொல்றே- அப்படித் தானே?"

"ஆமா... அதுக்கு பிறகு மறுமணம் பண்ணிக்கறது என் விருப்பம்தானே?"

"அதுசரி... ஆனா இப்படி சொத்துக்காகவே முடிவெடுக்கறது ஒரு பெண்ணுக்கு அழகா?"

"நான் எங்க எடுத்தேன். இல்ல நாங்க எங்க எடுத்தோம்? உங்க ஜோதிட சாஸ்திரம் அவரை எடுக்க வெச்சிருக்கு. அதுக்கு நான் பயன்படப் போறேன். அவ்வளவு தான்?"

"அதுசரி... ஆனா மனசுல ஒருத்தன்- மனையில ஒருத்தன்றது நல்லாவா இருக்கு?"

"அறுபத்தைஞ்சு வயசு கிழவருக்கு கல்யாணம்கறது மட்டும் நல்லா இருக்கா?"

"அப்ப பிராயத்துல நடக்கற கல்யாணத்தை தான் நீ மதிப்பியா?"

"நிச்சயமா... இந்த மாதிரி கல்யாணங்களுக்கு அர்த்தமே கிடையாது. அதுலயும் கல்யாணத்துனால ஒருத்தர் ஆயுள் கூடும் குறையும்னு சொல்லி பண்ற விஷயங்களுக்கு சுத்தமா அர்த்தம் கிடையாது. இதை பொய்யாக்கணும்னா அதுக்கு நான் துணிஞ்சு இறங்கணும். அப்படி இறங்கறதுனால எனக்கு பரிசா கிடைக்கப் போற விஷயம்தான் சொத்து.

எனக்கு அது கிடைச்ச பிறகாவது நீங்க ஜோசியம், ஜாதகத்தை எல்லாம் தூக்கி தூரப் போட்டுட்டு உழைப்பு புத்திசாலித்தனம் இவைகளை நம்புவீங்கன்னு நான் நினைக்கிறேன்..." திவ்யா பட்டாச்சார்யாவை அப்படி இப்படி பேச விடாமல் ஒரு பிடி பிடித்தாள்.

அவர் சிரித்தார்.

'பெண்ணே... புத்தி இருப்பதால் பேசுகிறாய்? அதற்கே ஏதாவது ஆனால் என்ன செய்வாய்... வேண்டாம் இந்த தைரியமும் ஆசையும் ஆபத்து...' என்று உள் மனது



சொன்னது. ஆனால், உதடு சொல்ல பிரியப்படவில்லை.

நடப்பதை வேடிக்கை பார்க்கத்தான் விரும்பியது.

# 7

'ஒரு விளையாட்டில் சட்ட திட்டங்களும் சரி, சந்தர்ப்பங்களும் சரி; இரண்டு தரப்பினருக்கும் சமமாகவே பங்கிடப்பட்டுள்ளது. இதைப் புரிந்து கொண்டு விளையாடும்போது வெற்றியோ தோல்வியோ அது அந்த நேரத்திற்கு மட்டும்தான். ஆனால், புரியாமல் விளையாடினால் விபரீதம்தான். அது விளையாட்டுக்குப் பிறகும் நீடிக்கும்.

வாழ்க்கையில் விதியும் மதியும் கூட அப்படித்தான்.'

-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா

வீட்டு வாசலில் கார் தேங்கும் சப்தம்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள் திவ்யா.

அஸ்வின் இறங்கிக் கொண்டிருந்தான்.

காலிங் பெல்லை அழுத்தவும் அம்மா போய் கதவைத் திறந்தாள்.

ஒன்றும் தெரியாதபடி பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

அஸ்வின் அம்மாவை சற்று தயக்கத்தோடு பார்த்தாள்.

"யார் தம்பி நீங்க?"

"என் பேர் அஸ்வின்... திவ்யா உங்க மகதானே?"

"ஆமா... என்ன விஷயம்?"

அவன் அந்தக் கேள்விக்கு பதில் கூறாமல் அமைதி காத்தான். அம்மாவை அது நெருடியது.

"என்ன விஷயம்னு கேட்டேன்..."

"ஒண்ணுமில்லம்மா... நான் கிரேட் இண்டஸ்ட்ரிய லிஸ்ட் சந்திரமௌலி சாரோட பி.ஏ..."

அவன் சந்திரமௌலி பெயரைப் பயன்படுத்தவும் அவள் முகத்தில் பரவசமான மாற்றம்.

"அப்படியா ரொம்ப சந்தோஷம்... சரி அதுக்கென்ன?" கேட்டாள்.

"சாரைப் பத்தி கேள்விப்பட்டிருப்பீங்க..."

"அவரைத் தெரியாமலா... அவர்தான் இந்தியா ஃபேமஸ் ஆச்சே?"

"அவரோட இப்போதைய நிலை தெரியுமா?"

"தெரியாதே... என்ன அவருக்கு...?"

"ஒண்ணுமில்லம்மா... நல்லாதான் இருக்காரு. ஆனாலும், ஜாதகப்படி அவர் இன்னும் ஆறு மாசம் கூட இருக்க முடியாதுங்கறாங்க..."

"ஜாதகப்படியா... அதை எல்லாம் நம்பறீங்களா என்ன?"

"அப்ப உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"எனக்கு நம்பிக்கை இருக்கு இல்லை. அதுவா முக்கியம். இதை எல்லாம் ஏன் என்கிட்ட சொல்றீங்க?"

திரும்பவும் மௌனத்தில் போய் தேங்கத் தொடங்கினான் அவன். திவ்யா அவனையே பார்த்தபடி இருந்தவள் மெல்ல முன் வந்து, "நான் சொல்றேம்மா..." என்றாள். அஷ்வின் அவளைச் சற்று ஆச்சரியத்தோடு பார்த்தான். அவளும் ஆச்சரியப்பட்டாள்.

"உனக்கு இவரைத் தெரியுமா திவ்யா..." என்று கேட்டாள்.



"இவரை நேரா தெரியாது. ஆனா கேள்விப் பட்டிருக்கேன். இவர் இப்ப இவரோட பாஸ் மிஸ்டர் சந்திரமௌலிக்கு இரண்டாம் தாரமா என்னைக் கல்யாணம் பண்ணி வைக்க வந்துருக்காரு... சரியா மிஸ்டர் அஷ்வின்..."

அடுத்த நொடி அம்மா கூர்மையானாள்.

"என்னது சந்திரமௌலிக்கு உன்னை இரண்டாம் தாரமாவா..." என்று கேட்டு அதிர்ச்சியை பலமடங்கு பெருக்கினாள்.

அஷ்வினிடம் தயக்கம் தொடர்ந்தது. இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியும் என்கிற ஆச்சரியமும் அவன் முகத்தில் கேள்வியாக விரவியிருந்தது.

"என்னடி சொல்றே... உனக்கு எப்படி தெரியும்?"

"அதுவா இப்ப முக்கியம். எப்படியோ தெரியும்."

"என்னப்பா இது... என் பொண்ணு சொல்றது நிஜமா?"

"அ... ஆமாம்மா..."

"முதல்ல எழுந்து வெளியே போப்பா. என்ன விளையாடறீங்களா?"

"அம்மா..."

"அம்மாவாவது சும்மாவாவது... உனக்கு மனசாட்சி இல்லை. இவ வயசு என்ன. அந்த ஆள் வயசு என்ன?"

"அம்மா நான் சொல்றத கொஞ்சம் கேளுங்க. அவர் ஒண்ணும் இரண்டாம் தடவை கல்யாணம் பண்ணிக்க அலையல. நல்ல மாங்கல்ய பலம் உள்ள ஒரு பெண் கழுத்துல அவர் தாலி கட்டினா அதனால அவர் இன்னும் ஒரு பத்து பதினைஞ்சு வருஷம் வாழ வாய்ப்பிருக்கு..."

"சரிதான்... அவர் ஆயுளுக்காக என் பொண்ணு சிலுவை சுமக்கணுமாக்கும்."

"உண்மைதாம்மா... ஆனா எத்தனை கோடி சொத்து வருது. அத யோசிச்சுப் பார்த்தீங்களா?"

"மண்ணாங்கட்டி... சொத்து வந்துட்டா போதுமா...? ஒரு பொண்ணுக்கு திருமாங்கல்யமும், சுமங்கலியா அவ இருக்கணும்ங்கறதும் எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?"

"உண்மைதாம்மா... ஆனா நீங்க கொஞ்சம் பெரிய மனசு பண்ணினா என் பாஸ் பல வருஷம் உயிரோட இருப்பார். அவரால ஆயிரக் கணக்கான தொழிலாளர் களும் சந்தோஷமா இருப்பாங்க."

"நீ இப்ப எழுந்து போறியா இல்லியா?"

அந்த வயதான பெண் ஆவேசத்தின் உச்சிக்குப் போனாள். அஸ்வின் சற்று குறுகிப் போனான். பிடிக்கப் பார்த்த மீன் கையை குத்திக் கிழித்து விட்டது போலத் தோன்றியது. எழுந்து கொண்டான். புறப்படக் காலெடுத்த வனைப் பார்த்து தடுத்தாள் திவ்யா.

"நில்லுங்க..."

அவன் நின்றான்.

"கொஞ்சம் உட்காருங்க. அம்மா நீ அப்படி வா..." அவள் தன் தாயை தள்ளிக் கொண்டு ஒதுங்கினாள். அரை மணிக்கும் மேல் பொழுது ஓடிய பிறகு இருவரும் வெளியே வர திவ்யா ஒரு வார்த்தையில் "எனக்கு சம்மதம். கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்க" என்றாள்.

அஸ்வின் பெரிதாக கையெடுத்துக் கும்பிட்டான். உற்சாகமாக கிளம்பினான். அம்மா முகம் பேயறைப் பட்டமாதிரி இருந்தது.

"திவ்யா இது ரொம்ப தப்பான முடிவுடி..." என்றாள்.

"இல்லம்மா... இதுதான் சரியான முடிவு. பேசாம நீ வேடிக்கை பார்..."

"ஒருவேளை உன் மாங்கல்ய பலத்தால அந்த பணக்கார மனுஷர் குணமாகி நல்லா விதமா செயல்பட ஆரம்பிச்சுட்டா என்ன பண்ணுவே?"



"அந்தைக்கு மீசை முளைச்சாதான் சித்தப்பா... அப்படி நடக்க வாய்ப்பே இல்லை. அவர் சாகப் போறது நிச்சயம் நான் அதை பயன்படுத்திக்கறேன். அவ்வளவுதான்!"

"திரும்பவும் சொல்றேன்... உன்னைவிட வயசுல பெரியவ, வாழ்க்கை அனுபவம் உள்ளவங்கற முறைல சொல்றேன். ஜாதகத்தை எல்லாம் சாதாரணமா எடை போட்டுடாதே."

"சரிம்மா. அப்படி ஒருவேளை நடந்தாலும் பாதக மில்லை. என் ஜாதக பலத்தால ஒரு பெரிய தொழிலதி பரை காப்பாத்தின பெருமை போதும் எனக்கு..."

"நிச்சயமா அப்புறமா வருத்தப்பட மாட்டியே?"

"நிச்சயமா மாட்டேன்... எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு. ஒரு ஓடிப் போன அப்பாவுக்கு மகளா பொறந்துட்ட எனக்கு, நிச்ச யமா நீ நினைக்கிற மாதிரி ஒரு நல்ல வரன் கிடைக்காது. ஒன்னு நான் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கணும். இல் லேன்னா இப்படித்தான் இரண்டாம் தாரமா போகணும். எது எப்படி இருந்தாலும் நான் விடப்போறதில்லை..."

திவ்யா தீர்மானத்தோடு பேசினாள். அம்மாவுக்கு சமாதானமாகவில்லை. இருந்தாலும் அவள் சொல்வதும் வாஸ்தவம்தானே?

## 8

'**வி**தியோடு மதியைக் கொண்டு போராடியவர் களில் அந்த பரந்தாமனும் ஒருவன். விதியை மாற்ற முடியாது. மாற்றவும் கூடாது என்கிற முடிவோடு மதியின் துணைகொண்டு தன் சக்ராயுதத்தால் சூரியனையே மறைத்து பாரதத்தில் அவன் காட்டிய சாதுர்யமே அதற்கு சான்று.'

-சோதிடச் பீஷ்மபட்டாச்சார்யா

ஆறு மாதங்களுக்குப் பிறகு...

சந்திரமௌலி இப்பொழுது மிகவும் ஆரோக்யமாக இருக்கிறார். பட்டாச்சார்யா சொன்னது போல திவ்யா வின் மாங்கல்ய பலம் அவரை மிக ஆரோக்யமாக மாற்றி விட்டது. டாக்டர்களே வியந்து போய் இது எப்படி சாத்யம் என்று கேட்கும் நிலை... பாவம் திவ்யாதான் தன் திட்டப் படி எதுவும் நடக்காத குழப்பத்திலும், பாஸ்கரையும் மறக்க முடியாமலும் தடுமாற்றத்தில் இருக்கிறாள். இது அவர்களது ரகசிய சந்திப்பிலும் எதிரொலித்தது.

"திவ்யா எப்படி இருக்கார் சந்திரமௌலி..."

"ரொம்ப நல்லா இருக்கார் பாஸ்கர். பட்டாச்சார்யா சொன்னபடி ஜாதகம் உண்மைதான் போல..."

"புடலங்கா, இதைச் சொல்ல உனக்கு வெட்கமா இல்ல."

"என்னை என்ன பண்ணச் சொல்றே? ஒரு பரிசோதனை பண்ணினோம். ஆனா ரிசல்ட் அவருக்கு சாதகமா இருக்கும் போது நீயும் நானும் என்ன பண்ண முடியும்?"

"இல்லை திவ்யா... எனக்கு நீ வேணும். பணம் இல்லேன்னா கூட பரவாயில்லை. என்னால உன்னைப் பிரிஞ்சு வாழ முடியாது."

"அப்படின்னா என்னை உன்கூட ஓடிவரச் சொல்றியா?"

"ஆமாம். அப்படித்தான் வெச்சுக்கோயேன்."

"கொஞ்சம் பொறு பாஸ்கர். அவர் என்மேல உயிரையே வெச்சிருக்கார். அவர் ஆயுளுக்கு காரணம் நான்தாங் கறதால என்னை தலைல வெச்சு தாங்கறார்..."

"நோ... இப்படி எதையாவது சொல்லி என்னை ஏமாத்திடாதே."



"ஸ்டுப்பிட்... உளறாம சொல்றத நீ கேள். என் மங்கல நீதான் இருக்க... இன்னும் கொஞ்ச நாள் பார்ப்போம். அதுக்குள்ற அவருக்கு..."

அவள் சொல்ல வந்து நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"உம் கமான் சொல்லு..."

"சாரி பாஸ்கர்... இப்ப அவர் என் புருஷன். கழுத்துல அவர் கட்டியிருக்கற தாலிக்கு நான் மதிப்பு கொடுக் கணும்..." அவள் தயக்கத்தோடு சொல்லவும் பாஸ்கர் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"அப்படிப் பார்க்காதே... அது என்னை என்னவோ பண்ணுது."

"என்னவோ பண்ணுதா... என்ன பண்ணுது?"

"இப்படி வளைச்சு வளைச்சு கேட்காதே. ரொம்ப சங்கடமா இருக்கு..."

"சரி. உனக்காக நான் இன்னும் முழுசா மூணு மாசம் காத்திருக்கேன். அதுக்குள்ற அந்த பணக்காரன் மண்டைய போடணும். இல்லை நீ என்கூட ஓடி வரணும். சொத்தும் வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம்."

"பார்ப்போம்."

"பார்ப்போமா... ஓ.கே. ன்னு சொல்லு."

"சரி. ஓ.கே."

"சரி இப்ப நான் ஒண்ணு பண்ணலாமா?"

"என்ன?"

"ஒரு முத்தம் தரட்டுமா."

"பாஸ்..."

"என்ன பாஸ்? எனக்கு அட்லீஸ்ட் அந்த சந்தோஷத் தையாவது தாயேன்."

"நோ பாஸ்... கொஞ்சம் பொறுமையா இரு."

"இல்ல திவ்யா... நீ கொஞ்சம் கொஞ்சமா மாற ஆரம்பிச்சுட்டே...."

"ஐயோ... நான் இப்ப இன்னொருத்தர் பொண்டாட்டி. அண்டர்ஸ்டாண்ட்?"

"அது நான் போட்ட திட்டத்தால. எப்பவும் நீ எனக்கு மட்டும்தான்."

"நான் இல்லேங்கல. ஆனா கழுத்துல அந்த ஆள் கட்டுன தாலியை வெச்சுக்கிட்டு... ஐ ஆம் சாரி. என்னால முடியாது."

"ரொம்பதான் தமிழ் சினிமா கதாநாயகி மாதிரி டயலாக் பேசி பிகு பண்றே."

"யு ஸ்டுப்பிட்... நீ என் கழுத்துல தாலி கட்டியிருக்கும்போது இன்னொருத்தன் வந்து என்கிட்ட உன்னை மாதிரி நடந்துக்கிட்டா ஒத்துக்குவியா?"

"ஓஹோ... என்னை மடக்கிட்டதா உனக்கு நினைப்பா... பிரியத்தோட பண்ணிக்கற கல்யாணத்துக்கும், மத்ததுக்கும் வித்தியாசம் இருக்குல்ல...?"

"இது பிரியத்தோட நடந்த கல்யாணம்தான். அதாவது பணத்து மேல இருக்கற பிரியத்துல..."

"போதும்... எனக்கு பதிலுக்கு பதில் சொல்லி மேல மேல எரிச்சல் மூட்டாதே. நான் வரேன். ஒண்ணு மட்டும் உறுதி. இன்னும் சரியா நாத்தி எண்பது நாட்கள்தான் உனக்காக நான் காத்திருப்பேன். நீ வரணும். வரலை...?"

மிரட்டலாக கேள்வியை முன்வைத்து விட்டுப் போனான். அவன் போனபிறகும் அவன் சந்திப்பும், கேள்விகளும் ஒரு மலைபோல் மனதை அழுத்தி ஆக்ரமித்து அவளை சகஜப்படுத்தாமல் சஞ்சலப்படுத்திக் கொண்டேயிருந்தன.

வீடு திரும்பியபோது பாரிஜாதம் எதிரில் வந்தாள்.



"எங்கடா போய்ட்டு வரே?" என்று சக்களத்தி காய்ச்சலே துளியுமின்றி கேட்டாள்.

"க... கம்மா பீச் வரைக்கும்..."

"நல்லது. அத்தான் உன்னை பாக்கனும்னு காத்து கிட்டிருந்தார். என்னன்னு போய்க் கேளு..."

போய்க் கேட்டாள். அவரும் லேசான வழுக்கை தலையை வருடியபடியே பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"திவ்யா... ஃபேக்டரி பொறுப்பை இனி முழுசா நீயே எடுத்துக்கிட்டா நல்லா இருக்கும்னு நினைக்கறேன். வர்ற போர்டு மீட்டிங்ல அதுக்கான பரபோசலை கொண்டு வரலாம்னு நினைக்கிறேன்."

"ஐய்யோ... எனக்கு எதுக்கு அவ்வளவு பெரிய பொறுப்பு..."

"நீ எடுத்துக்கறதுதான் நல்லது. உனக்கு நான் சந்தோஷம் தர வேண்டாமா..."

அவள் புரியாமல் அவரைப் பார்க்கையில் அவர் சிரித்தபடி சொன்னார்.

"நான் கொஞ்சம் உடம்பை தேத்திக்க நினைக்கறேன். இன்ஃபாக்ட் நம்ம கல்யாணத்துக்கு பிறகு எனக்கு ஒரு முப்பது நாப்பது வயசு குறைஞ்சுட்ட மாதிரி ஒரு ஃபீலிங். நீ கம்பெனியை பாத்துக்க ஆரம்பிச்சுட்டா நான் கொஞ்சம் உடம்பை கவனிப்பேன். கோயமுத்தூர்ல ஒரு இயற்கை நல மருத்துவமனை இருக்காமே. அங்க போய்ட்டுவந்து என் நண்பன் ஒருவன் அறுபது வயசுல ஒரு குழந்தைக்கு அப்பா ஆயிட்டான்னா பார்த்துக் கோயேன்..."

அவர் அப்படிச் சொல்வதன் மூலம் தனக்கும் அப்படி ஒரு ஆசை இருக்கிறது என்று சொல்லாமல் சொன்னார்.

அதன்படிதான் பிறகு நடந்து கொள்ளவும் செய்தார். கோயமுத்தூர் போய்விட்டு ஒரு பதினைந்து நாள் கழித்து திரும்பி வந்தபோது ஆளே மாறிப் போய்விட்டிருந்தார்.

தலைக்கு டை அடித்துக் கொண்டு ட்ரிம்மாக முடி வெட்டிக் கொண்டு பார்க்க ஒரு முப்பது வயது இளைஞனாகத்தான் தெரிந்தார்.

திவ்யா அயர்ந்து போனாள்.

பாஸ்கர் நடுநடுவே மனதில் தோன்றி சஞ்சலம் மூட்டிக் கொண்டே இருந்தான். இடை இடையே போன் செய்து கேள்வி கேட்டான்.

"எப்படி இருக்கான் அந்தக் கிழவன்?" கேள்வியே ஒரு மாதிரி குத்தியது.

"நல்லா இருக்கார்..."

"நல்லா இருக்காரா... அப்ப சாகமாட்டானா?"

"பாஸ்கர் இப்படி எல்லாம் பேசறது நீங்களா..."

"நீ கேட்க மாட்டே? காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போன கதை தெரியும்தானே உனக்கு..."

"பாஸ் நான் இப்ப சொல்றேன். விதி ரொம்ப வலிமையானது. நாம நினைக்கற மாதிரி எல்லாம் எதுவுமே நடக்கறதில்ல. அது விருப்பப்படிதான் நாம எப்பவும் எதையும் நினைக்கறோம்."

"என்ன திவ்யா... நான் இனி உங்க பேச்சைக் கேட்க மாட்டேன்னு சொல்லாம சொல்றியா?"

"ஐய்யோ ஏன் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறீங்க?"

"எதை புரிஞ்சுக்கணும்?"

"எல்லாத்தையும்தான். நாம போட்ட திட்டப்படி எது ஒழுங்கா நடந்துருக்கு. சொல்லுங்க பார்ப்போம்."

"எல்லாம் ஒழுங்காதான் நடந்துகிட்டு வருது. இப்பக் கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை. அந்தக் கிழவன் ஆரோக்யமா இருந்தா, அவனை நீயே கொன்னு கூட ஜாதகத்தை பொய்யாக்கலாம்."



"என்னது, கொலையா?"

"ஆமாம்... உனக்கு பயமா இருந்தா சொல்லு. நான் பண்றேன். அப்புறம் நாம வெச்சதுதான் இந்த நாட்டுல சட்டம்."

"நோ... நான் சம்மதிக்க மாட்டேன்."

"அப்ப முடிவா உனக்கு ஒண்ணு சொல்றேன். கேட்டுக்கோ. ஒண்ணு அவன் சாகணும், இல்லை நான் செத்துடுவேன்."

"பாஸ்கர் என்னை ஏன் இப்படி சித்ரவதை பண்றே?"

"நான் பண்ணலை. நீதான் என்னை பண்ணிகிட்டிருக்கே. என் காதல் வேதனை துளிகூட உனக்கு தெரியலை. அந்த பணக்காரனை கல்யாணம் பண்ணினதும் படாடோபம் டாம்பீகம் எல்லாம் வந்து உன்னை மயக்கிடிச்சு. நீ மனசு மாறிட்டே."

"ஐய்யோ என்னை புரிஞ்சுக்கோ பாஸ்..."

"சரி... நீ இவ்வளவு சொல்றதால சொல்றேன். ஆறு மாசத்துக்கு கூட நான் காத்திருக்கேன். இந்த பீரியட்ல ஒண்ணு அவன் சாகணும். இல்லேன்னா நீ அவனை விட்டுட்டு ஓடி வரணும். இதுல ஏதாவது ஒண்ணு நடக்கணும். அப்படி நடக்காத பட்சத்துல எல்.ஐ.சி. கட்டடம் மேல் இருந்து கீழ விழுந்து நான் உயிரை விட்டுடுவேன். என் சாவு உன்னை ஒவ்வொரு நாளும் சித்ரவதை செய்யும். தெரிஞ்சுக்கோ..."

மறுமுனையில் பாஸ்கர் போனை வைத்துவிட்டான். திவ்யா கலங்கிப் போனாள். புலி வாலைப் பிடித்தது போல உணர்ந்தாள்.

வாழ்க்கையைத்தான் எவ்வளவு சாதாரணமாக எடை போட்டு விட்டோம்... ச்சே!

எதிரிலேயே சந்திரமௌலியின் புன்னகை ததும்பும் படம். அந்த படத்தை பார்த்த மாத்திரத்தில் அவளுக்கு நெகிழ்ச்சி ஏற்பட்டது.

அதே சமயம் திறந்து கொண்ட கதவுக்கு பின்னால் சந்திரமௌலியும் தெரிந்தார். கூடவே அஷ்வினும் பின் தொடர்ந்து வந்தான்.

அவன் முகம் வெளிறிப்போய் ஒரு மாதிரி இருந்தது.

அவர்களைப் பார்த்துவிட்டு திவ்யா திணறினாள்.

"வாங்க..." என்றாள்.

"நான் வாறது இருக்கட்டும். நீ ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

அவர் நேரா விஷயத்துக்கு வந்தார்.

"நான்... நான்... நல்லாதானே இருக்கேன்..." அவளும் சமாளித்தாள்.

"சரி, யார் கூட போன்ல பேசிகிட்டிருந்தே...?"

"அது... அது.. ஒரு ப்ரெண்டோட..."

"ஆம்பள ஃப்ரெண்டா, பொம்பளஃப்ரெண்டா?"

"அது... அது..."

"சாரி டியர்... உனக்கு போன் பண்ணனும்னு ஹால் போனை எடுத்தேன். நீ பேசிக்கிட்டிருந்ததை கேட்க நேர்ந்தது. ஆமா யார் அந்த பாஸ்கர்."

"பாஸ்கர்... பாஸ்கர்..."

"அஷ்வின் உனக்கு தெரியுமா?"

அவன் மிடறு கூட்டி விழுங்கினான்.

"கமான்... அவனை உனக்கு தெரியுமா?"

"தெ... தெரியும் சார்..."

"போய் முதல்ல கூட்டிக்கிட்டு வா..."

"சார்..."

"டு வாட் ஐ ஸே..."

அவர் கத்தவும் அவன் புறப்பட்டான்... அவர் தொடர்ந்தார்.



"ஐ ஆம் சாரி திவ்யா. இந்த வயசுல எனக்கு கல்யாணம் ஆனதே பெரிசு. இந்த கல்யாணத்துக்கு பின்னால உனக்கொரு காதல் இருக்கிறதோ, அதை நீ ஒதுக்கிவெச்சுட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதோ எனக்கு தெரியாது.

என் மூத்த மனைவியோட கட்டாயத்துனாலதான் நான் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன். ஜாதகத்துல எனக்கும் நம்பிக்கை கிடையாது. ஆனா கல்யாணத்துக்கு பிறகு எனக்கு ஏற்பட்ட மாற்றம், என்னுள் பெருகின ஆரோக்கியம் எல்லாமே, என்னை ஜாதகம் உண்மையோன்னு நினைக்க வெச்சுது. ஆனா இப்ப அது உண்மையோ பொய்யோ அதுக்கு விலை நிச்சயமா உன் காதல் கிடையாது. எனக்காக நீ உன் காதலை இழக்கத் தேவையில்லை. எவ்வளவோ பாவங்கள்- இதுல இது வேறயா?"

சந்திரமௌலி தான் ஒரு சத்யத்தில் ஊறிய சத்யமான மனிதன் என்பதற்கு ஏற்ப பேச, திவ்யாவுக்கு அழுகையாக வந்தது.

"ஐய்யோ அப்படி எல்லாம் பேசாதீங்க. நான் என் காதலை ஒதுக்கிட்டு உங்களைக் கல்யாணம் செய்துகிட்டது வாஸ்தவம்தான். ஆனா இப்ப எனக்குள்ள எந்த காதலும் இல்லை.

அப்போ நான் வாழ்க்கையை ஒரு வியாபாரமா பார்த்தேன். ஆனா இப்போ அப்படி இல்லை. நான் உங்களை இப்ப மனப்பூர்வமா விரும்பறேன்." என்று ஓடிப்போய் அவர் காலைக் கட்டிக் கொண்டாள். அவர் சிலைபோல நின்றார். சப்தம் பாரிஜாதத்தையும் இழுத்து வந்தது.

"வா பாரிஜாதம்... உன் விபரீத ஆசையால என்னவெல்லாம் நடந்திருக்கு தெரியுமா?" கேள்வி அவளை நோக்கிப் பாய்ந்தது.

"அஸ்வின் சொன்னான். சத்யமா நான் இப்படி எல்லாம் நடக்கும்னு எதிர்பார்க்கலை."

"எதிர்பார்க்காதது நடக்கறதுதானே வாழ்க்கை. நான் இப்ப இவளை விவாகரத்து பண்ணி அந்தப் பையனோட சேர்த்து வைக்கப்போறேன். அதுதான் நடந்த தப்புக்கு பரிகாரம்."

"ஐய்யோ அப்புறம் உங்களுக்கு ஏதாவது...?"

பாரிஜாதம் நடுங்கினாள்.

"அது சரி,- உன் சுயநலத்துக்காக இவங்க காதலை தெரிஞ்சே அழிக்கச் சொல்றியா?'

"இல்ல... எனக்கு இப்ப காதல் இல்ல... நான் புனிதமான கல்யாண உறவை அறுத்துக்கிட்டு போய் காதலுக்கு உயிர் கொடுக்க விரும்பலை. அதுக்கான தகுதியும் அந்த பாஸ்கருக்கு இல்லை."

அலறினாள் திவ்யா.

"நோ திவ்யா... நீ குழம்பிப் போயிருக்கே. எனக்கு ஒண்ணுமில்ல. நமக்கு நடந்ததும் கல்யாணமே இல்லை. நான் மனப்பூர்வமா உனக்கு விவாகரத்து தரேன். இந்த சாஸ்த்ரம் சம்பிரதாயம் ஜோசியம் பேரால இனி ஒரு தப்பும் எங்கேயும் நடக்கக் கூடாதுன்னா நீ உன் லவ்வரோட சேர்ந்துதான் தீரணும்"- அவர் தீர்மானமாக சொல்லும்போதே அஸ்வின் பாஸ்கரோடு உள்ளே நுழைந்தான்.

அவனை மேலும் கீழுமாய் பார்த்தவர்.

"ஐ ஆம் சாரி மை பாய்... உங்க காதல் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. தெரிஞ்சிருந்தா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்க மாட்டேன். இப்ப கூட கெட்டுப் போயிடலை. நான் இவளுக்கு விவாகரத்து தந்துடறேன். நீ அதன் பிறகு இவளை தாராளமா கல்யாணம் பண்ணிக்கலாம். அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்."



சந்திரமௌலியின் விளக்கம் கேட்டு பாஸ்கர் சிலிர்த்துப் போனான். என்ன பேசுவது... எதைப் பேசுவது என்றே அவனுக்குத் தெரியவில்லை.

திவ்யா எதையோ சொல்ல வாயெடுத்தாள்.

"நோ... எதுவும் பேசக்கூடாது. எனக்கு எதுவும் ஆயிடாது. உங்க அவ்வளவு பேருக்குமே நான் உயிரோட பல ஆண்டு வாழணும்ங்கற எண்ணம் இருக்கு. போதும் அது போதும் எனக்கு. அது என்னைக் காப்பாத்தும்."

அவர் அழுத்தமான நம்பிக்கையோடு சொல்லி விட்டு "விவாகரத்து ஆனாலும் நீ என் கம்பெனி எம்.டி.தான்." என்று அவளுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார்.

பாஸ்கர் ஒரு வினாடி தாமதிக்கவில்லை.

அவர் காலில் பொதேல் என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

சிறிது தயங்கி விட்டு அவளும் விழுந்தாள்.

## 9

**பரீட்சித்துவின் கதை விதியை யாரும் வெல்ல முடியாது என்பதற்கு ஒரு உதாரணம். சத்யவானின் கதையோ விதியை வெல்ல முடியும் என்பதற்கு ஒரு உதாரணம். இந்த இரண்டு கதைகளும் எதைச் சொல்கின்றன?**

-சோதிடர் பீஷ்மபட்டாச்சார்யா

திவ்யா கழுத்தில் பாஸ்கர் தாலியை கட்டவும் கெட்டி மேளம் முழங்குகிறது. சந்திரமௌலி பாரிஜாதத்துடன் வந்திருந்து அட்சதை போட்டு வாழ்த்தி விட்டு புறப்பட்டும் போனார். சந்திரமௌலிக்கும் திவ்யாவுக்கும் நடந்த திருமணம் ரகசிய திருமணமாக இருந்ததால்,

அவர்கள் பிரிவும் ரகசியமாகவே இருந்து விட்டது. ஊர் பார்க்க ஒரு பிரச்சினையும் இல்லை.

பாரிஜாதத்துக்கு மட்டும் பக் பக் என்றது. கல்யாணத்துக்கு பீஷ்ம பட்டாச்சார்யாவும், ராமநடராஜ தீட்சதரும் கூட வந்திருந்தனர்.

அஷ்வின் பட்டாச்சார்யாவை பரிதாபமாகப் பார்த்தான். "சாமி... விஷயம் இப்படி மாறும்னு நான் எதிர் பார்க்கலை சாமி..." என்றான். அவர் மௌனமாக நின்றார்.

"நீங்க சொன்ன ஜோதிடம் ஜெயிச்ச மாதிரியும் இருக்கு. தோத்துட்ட மாதிரியும் தெரியுதே...?" என்று தொடர்ந்தான்.

"என் ஜோசியம் பொய்யில்லை அஷ்வின். திவ்யாவோட சேர்க்கைதான் உன் பாஸ் உயிர் பிழைக்கவே காரணம். இப்ப அவ பிரிஞ்சுட்டதால திரும்பவும் அவருக்கு எந்த நிமிஷமும் எதுவும் நடக்கலாம்." என்று பட்டாச்சார்யா கிலிமூட்டினார்.

"இந்த ஜோடிங்க எப்படி இருப்பாங்க?"

"இவங்களுக்கு சேர்ந்தாகணும்னு விதி இருக்கு. அதான் ஒரு கல்யாணம் ஆகியும் பிரிஞ்சு இந்த பெண் இவன்கிட்ட வந்து சேர்ந்துருக்கா..."

"அப்ப இவங்க நல்லா இருப்பாங்களா?"

"நிச்சயமா..."

பட்டாச்சார்யா சொல்லச் சொல்ல காற்றுப்போன பலூன் மாதிரி ஆகிப்போனது அவன் முகம். அப்படியே பொழுதும் கழிய பாஸ்கர்- திவ்யாவின் தேனிலவுக்கார் கொடைக்கானல் நோக்கி புறப்பட்டது. எல்லாம் சந்திர மௌலியின் ஏற்பாடு. அவர்கள் காலில் விழுந்து வணங்கும்போது,

"இப்பதான் எனக்கு நிம்மதியாயிருக்கு..." என்று உணர்ச்சிவசப்பட்டார்.



அந்தக் காரும் பூ அலங்காரத்தோடு ஒரு புஷ்பக விமானம் போல புறப்பட்டு போனது. மொத்தக் குடும்பமும் கையை ஆட்டி விடை கொடுத்தனுப்பியது. சந்திர மௌலி போய் தன் காரில் ஏறினார். ஃபேக்டரிக்கு காரை விடச் சொல்லிவிட்டு பெருமூச்சு விட்டார்.

ஃபேக்டரியும் வந்தது. தன் சீட்டுக்கு போய் ஃபைல்களை பார்க்கத் தொடங்கினார். சில மணி நேரங்கள் கழிந்த நிலையில் தொலைபேசி சிணுங்கியது.

காதைக் கொடுத்தவருக்குள் இதயம் கரணம் அடித்தது.

"சார் டி.என்.-09 9008 கார் உங்க கார் தானே?"

"ஆமாம்... அது ஹனிமூன் கப்பிள்ஸ் போன காராச்சே. அதுக்கென்ன?"

"வெரி சாரி சார். செங்கல்பட்டுகிட்ட ஒரு டிரக் மோதி கார்ல டிராவல் பண்ண மாப்பிள்ளை ஸ்பாட்லயே அவுட். பொண்ணுக்கு லேசா காயம்..."

-ரிசீவரை வைத்துவிட்டு விக்கித்தவரை காத்திருந்தது போல கைப்பற்றியது மாரடைப்பு! சில விநாடிகள்தான் பொத்தென்று சவமாகி மேஜை மேல் சரிந்தார்.

ஓடி வந்தான் அஷ்வின்.

சந்திரமௌலி பிணமானதைப் பார்த்துவிட்டு "ஐய்யோ சார்..." என்று அலறினான்.

பீஷ்ம பட்டாச்சார்யா சொன்னபடியே திவ்யாவை பிரிந்த சந்திரமௌலி போய்விட்டார். சரி, அவளோடு சேர்ந்த பாஸ்கர் ஏன் போய் சேர்ந்தான்?

ஜாதகம் ஜெயித்ததா, தோற்றதா?

இல்லை இரண்டுமேயில்லையா?.

என்றால்...

எது நிஜம்?

முற்றும்